# 1992 இல் பொருளாதாரச் செயலாற்றம்
## பிரச்சினைகளும் கொள்கைகளும்

பொருளாதாரத்தின் 4.3 சதவீத வளர்ச்சி, கைத்தொழில் ஏற்றுமதிகளின் மிகக் கூடியளவு விரிவாக்கம், சாதகமான சென்மதி நிலுவை நிலைமைகள், அரசிறை உறுதிப்பாட்டை நோக்கிய கணிசமான முன்னேற்றம் என்பன 1992இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தில் நன்கு புலப்படும் அம்சங்களாக விளங்கின. எனினும் மிகையான நாணய விரிவாக்கமும் விலைகளில் உறுதியான உயர் அதிகரிப்பும் அக்கறை கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகக் காணப்பட்டன.

வேளாண்மை உற்பத்தியின் கடுமையான பின்னடைவின் மத்தியிலும் 1992 இல் நாடு 4.3 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்து 1990 இல் தொடங்கிய வளர்ச்சி ஆற்றலைப் பேணியது. விரைந்து விரிவடையும் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலின் ஊக்குவிப்புடன் இவ்வாண்டில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 37 சதவீதத்தினால் அதிகரித்தன. சென்மதி நிலுவையில் 1992 இல் சிஎஉ 1,290 இலட்சம் கொண்ட மொத்த மிகையொன்று காணப்பட்டதோடு மிகையினைப் பதிவுசெய்யும் தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாகவும் இது காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 1991 இன் 11.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அரசிறை உறுதிப்பாட்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது. எனினும், 1992

அட்டவணை 1.1

தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1990—1992

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1990* | 1991* | 1992* | 1991* | 1992* |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 290,479 | 335,356 | 384,354 | 15.4 | 14.6 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 129,244 | 135,204 | 140,960 | 4.6 | 4.3 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 283,794 | 327,989 | 376,660 | 15.6 | 14.8 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 126,426 | 132,214 | 138,097 | 4.6 | 4.4 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 16,993 | 17,247 | 17,405 | 1.5 | 0.9 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. (i) நடைமுறை விலைகளில்(ரூபா) | 16,701 | 19,017 | 21,641 | 13.9 | 13.8 |
| (ii) நிலையான விலைகளில்(ரூபா) | 7,440 | 7,666 | 7,934 | 3.0 | 3.5 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1992ஆம் ஆண்டுக்கான பெறுமதிகள் கிடைக்கத்தக்க சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

இல் பண நிரம்பலின் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பானது 17 சதவீதமாகக் காணப்பட்டவேளையில் நுகர்வோர் விலைகளின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 11.4 சதவீதமாக அமைந்தது.

தொடர்ச்சியான வரட்சி நிலைமைகளின் காரணமாக வேளாண்மையின் உற்பத்தியில் பின்னடைவு காணப்பட்டபோதிலும் 1992 இல் இலங்கைப் பொருளாதாரம் நியாயமான உயர் வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது. 1992 இல் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ.) 4.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயை அனுமதிப்பதன் மூலம் பெறப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உ.) 1991 இன் 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீத வளர்ச்சியைக் காட்டியது.


1992 இல் மொ.உ.உ. வளர்ச்சியானது 1990 இல் பதிவு செய்யப்பட்ட 6.2 சதவீதத்தைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகக் காணப்பட்டபோதிலும் நாட்டை எதிர்நோக்கும் பாதகமான பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிலைமைகளைக் கருத்திற் கொள்கையில் இது பாராட்டற்குரியதாகும். பன்னாட்டு அரங்கில், பல கைத்தொழில் நாடுகளில் காணப்பட்ட நீடித்த பொருளாதாரப் பின்னடைவானது பல முதன்மைப் பண்டங்களின் கேள்வியில் வீழ்ச்சியுறும் தாக்கத்தினைக் கொண்டிருந்தது. உள்நாட்டில், ஆண்டின் ஆரம்ப காலத்தில் நிலவிய தொடர்ச்சியான வரட்சி நிலைமை, வேளாண்மை உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது. இச் சூழலில் 1992 இன் வளர்ச்சிச் செயலாற்றமானது மிதமானதாகக் காணப்பட்டபோதிலும், பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களினதும் தாராளமயப்படுத்தல்களினதும் மத்தியில் பொருளாதாரத்தின் உறுதியான விரிவாற்றலை இது குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளது.

1992 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ.தே.உ. ரூ. 377 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 14.8 சதவீத அதிகரிப்பாகும். இதேவேளையில் நிலையான காரணிச் செலவு (1982) விலைகளில் மொ.தே.உ. ரூ. 138 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட 4.4 சதவீத அதிகரிப்பினையும் பிரதிபலிக்கின்றது. இதன்படி பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றங்களை அளவிடும் உள்ளடக்க மொ.தே.உ. சுருக்கி 1992 இல் 10.0 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1992 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 174.1 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே 1992 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொ.தே.உ. ரூ. 21,641 (ஐ.அ. டொலர் 494) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 13.8 சதவீத அதிகரிப்பாகும். 1992 இல் உண்மை நியதிகளில் தலைக்குரிய மொ.தே.உ. அதிகரிப்பு 3.5 சதவீதமாகும்.

நடைமுறை நியதிகளில் நாட்டின் மொத்த உள்நாட்டுச் சேமிப்பு ரூ. 65 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1991 இன் 12.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தன.

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

### அட்டவணை 1.2

### மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1990–1992 நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1990* | 1991* | 1992* | 1990* | 1991* | 1992* |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... ... | 30,011 | 30,570 | 30,112 | 8.5 | 1.9 | –1.5 |
| இதில்: | | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 3,004 | 3,100 | 2,303 | 12.6 | 3.2 | –25.7 |
| 1.2 இறப்பர் ... ... | 718 | 655 | 662 | 3.0 | –8.8 | 1.1 |
| 1.3 தெங்கு ... ... | 3,261 | 2,827 | 3,018 | 1.6 | –13.3 | 9.0 |
| 1.4 நெல் ... ... | 6,378 | 6,002 | 5,882 | 21.3 | –5.9 | –2.0 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடற்றொழிலும்) ... ... | 16,650 | 17,986 | 18,184 | 5.2 | 8.0 | 1.1 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... ... | 3,901 | 3,511 | 3,300 | 9.1 | –10.0 | –6.0 |
| 3. தயாரிப்பு ... | 22,427 | 23,949 | 26,106 | 9.5 | 6.8 | 9.0 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,530 | 3,332 | 2,959 | 8.4 | –5.6 | –11.2 |
| 3.2 ஏனையவை ... ... | 18,897 | 20,617 | 23,147 | 9.7 | 9.1 | 12.3 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 8,761 | 9,033 | 9,665 | 2.9 | 3.1 | 7.0 |
| 5. பணிகள் ... ... | 64,144 | 68,141 | 71,777 | 4.3 | 6.2 | 5.3 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 129,244 | 135,204 | 140,960 | 6.2 | 4.6 | 4.3 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | –2,818 | –2,990 | –2,863 | — | — | — |
| 8. மொத்த தேசிய உற்பத்தி ... | 126,426 | 132,214 | 138,097 | 6.4 | 4.6 | 4.4 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


குறிப்பு: 1992ஆம் ஆண்டுக்கான பெறுமதிகள் கிடைக்கத்தக்க சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

இதேவேளையில் தேசிய சேமிப்பு விகிதம் அதாவது சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேசிய சேமிப்புக்களின் விகிதம் 1991 இன் 15.2 சத வீதத்திலிருந்து 1992 இல் 18.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1992 இல் மூலதனவாக்க வீதம் மேலும் முன்னேற்றமடைந்ததெனினும், அதிகரிப்பு சிறிதளவாகவே காணப்பட்டது. நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக இருப்புக்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1991 இன் 22.9 சதவீதத்திலிருந்து 1992 இல் 23.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட அதே தன்மையினைத் தொடரும் வகையில் தனியார் துறையே மூலதனவாக்கத்தின் முக்கிய பங்கேற்பாளராக விளங்கியது. 1992 இல் தனியார் துறையில் மூலதனவாக்கம் 21.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு இது 1991 இன் வீதத்தினைவிட உயர்வானதாக இருந்தது. தனியார்துறை முதலீட்டின் முக்கிய விடயங்களாக வதிவு மற்றும் வதிவில்லா கட்டடங்களின் கட்டு

# கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி.

மானம், போக்குவரத்துக் கருவிகள், மற்றும் பொறிகளும் கருவிகளும் என்பன விளங்கின. இதேவேளையில் அரசதுறையின் மூலதனவாக்க வளர்ச்சி வீதம் 1991 இன் 25.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 1.9 சதவீதத்திற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

வளர்ச்சிச் செயலாற்றத்தின் துறைவாரியான பகுப்பாய்வொன்று, 1992இல் பொருளாதாரத்தின் முதன்மை வளர்ச்சித் துறைகளாகத் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் விளங்கியமையை வெளிப்படுத்தியது. மாறாக, வேளாண்மை மற்றும் சுரங்க அகழ்வுத் துறைகள் எதிர்க்கணிய வளர்ச்சியினைப் பதிவு செய்தன. அண்மைக் காலத்தில் காணப்பட்ட வளர்ச்சி இயக்க வேகத்தினைப் பேணும் வகையில் தயாரிப்புத்துறை 1992 இன் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான உந்து விசையினை வழங்கி இவ்வாண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் மூன்றிலொரு பங்கிற்குப் பங்களிப்புச் செய்தது. முழுமையாகப் பார்க்கும்போது தயாரிப்புத்துறை 1991 இன் 6.8 சதவீத வளர்ச்சி வீதத்தினைத் தொடர்ந்து உண்மை நியதிகளில் 9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தயாரிப்புத்துறையினுள் ஏற்றுமதிசார் புடவைகள், ஆடைகள் கைத்தொழிலை முக்கிய கூறாகக் கொண்ட தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 13 சதவீதத்தினால் விரிவடைந்தது. 1992 இல் சிறு கைத்தொழில் துணைத்துறை 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வளர்ச்சிச் செயலாற்றத்தைத் தீர்மானிப்பதில் தயாரிப்புத்துறையின் தொடர்ச்சியான உறுதிப்பாடானது, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் தாராளமயப்படுத்தல் கொள்கைக்கு இசைந்து செல்லும் வகையில் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள அதிகரித்துவரும் அமைப்பு மாற்றங்களைக் குறித்துக் காட்டுவதாக உள்ளது.

1992 இன் வளர்ச்சி ஆற்றலைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்த இன்னுமொரு முக்கிய துறையான பணிகள்துறை 1991 இன் 6.2 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 5.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. இத்துறையினுள் போக்குவரத்து, தொடர்பூட்டல், வர்த்தகம் மற்றும் வங்கித்தொழில் நிதியியல் பணிகள் போன்ற அனைத்தும் அதிகரித்த வளர்ச்சியினைப் பதிவு செய்தன. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறைகள் 6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை பொதுவாக 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறை 1992 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த அதிகரிப்பில் கிட்டத்தட்ட 28 சதவீதத்திற்கு வகை கூறியது.

தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 1992 இல் வேளாண்மை மற்றும் சுரங்க அகழ்வுத் துறை குறைவான செயலாற்றத்தைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தத் துறை சார்பு ரீதியில் கூடிய நிறையைக் கொண்டிருப்பதால் இவ் வீழ்ச்சியானது 1992 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொதுவான வளர்ச்சி வீதத்தில் கணிசமான அளவு பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. குறிப்பாக இவ்வாண்டில் வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. முழுமையாகப் பார்க்குமிடத்து 1992 இல் பெருந்தோட்டத்துறையின் கூட்டிய பெறுமதி 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் நெல், கரும்பு மற்றும் துணை உணவுப் பயிர்கள் என்பனவற்றிலிருந்தான பங்களிப்பும் வீழ்ச்சியடைந்தது.

தேயிலை, நெல் மற்றும் கரும்பு உற்பத்தியைப் பாதித்த, ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியின் தாக்கத்தின்கீழ் 1992 இல் வேளாண்மைத் துறையானது கவர்ச்சி குறைந்த செயலாற்றத்தையே காட்டியது. தேயிலை உற்பத்தி 26 சதவீத அதிகூடிய வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் நெல் உற்பத்தியும் முன்னைய ஆண்டைவிட 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் இறப்பர் உற்பத்தி 1 சதவீதத்தினால் சிறிதளவாக உயர் வடைந்த வேளையில் தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டின் வரட்சியால் பாதிக்கப்பட்ட தாழ் மட்டத்திலிருந்து 9 சதவீத அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. 1992 இல் துணை உணவுப் பயிர்களில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் சீனி உற்பத்தி 10 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இவ்வாண்டில் வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய அமைப்பு மாற்றமாக அரசுக்குச் சொந்தமான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் தனியார் மயப்படுத்தப்பட்டமை விளங்கியது மொத்தம் 502 இல் எல்லாமாக 449 அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் 22 தனியார் முகாமைக் கூட்டு நிலையங்களிடம் கையளிக்கப்பட்டன. இவை 94,541 எக்டேயர்களைக் கொண்ட 356 தேயிலைத் தோட்டங்களை உள்ளடக்கியிருந்தன. முகாமைத்துவத்தைத் தனியார் மயப் படுத்துவதன் குறிக்கோளாக உற்பத்தியை அதிகரித்தல், தரத்தினை மேம் படுத்துதல், மேந்தலைச் செலவுகளைக் குறைத்தல் என்பனவற்றின்மூலம் இம் முக்கிய துறையின் வர்த்தக ரீதியில் நிலைத்து நிற்கும் ஆற்றலை உயர்த்துவது காணப்பட்டது.

1992 இல் தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உச்ச மட்டமான 2,410 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 26 சதவீதத் தினால் 1,790 இலட்சம் கிலோக்கிறாம்களுக்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. 1992 இன் தேயிலை உற்பத்தியானது 1956 இலிருந்து எப்பொழுதுமே பதிவு செய்யப்படாத மிகத் தாழ்ந்த மட்டமாகக் காணப்பட்டது. ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியே மந்தமான உற்பத்திச் செயலாற் றத்திற்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக விளங்கியது. தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சியானது மூன்று உயர நில வகைகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. தாழ்நிலத் தேயிலைகளின் வெளியீடு 1991 இன் 1,160 இலட்சம் கிலோக் கிறாம்களிலிருந்து 1992 இல் 25 சதவீதத்தினால் 870 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உயர் மற்றும் மத்திய நிலத் தேயிலைகளின் உற்பத்தி முறையே 27 சதவீதத்தினாலும் 26 சதவீதத்தினாலும் 540 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும் 380 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. அண்மைக் காலங்களில் உறுதியாக அதிகரித்த சீ.ரீ.சீ. (வெட்டிக் கழித்துச் சுருட்டப்பட்ட) தேயிலைகளின் வெளியீடும் 1992 இல் 23 சதவீதத்தினால் 51 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கான வீழ்ச்சியினைப் பதிவு செய்தது.

உற்பத்திப் பின்னடைவைத் தொடர்ந்து 1992 இல் கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு 24 சதவீதத்தினால் 1,730 இலட் சம் கிலோக்கிறாம்களுக்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில், 1991 இல் கொழும்பு ஏலங்களில் சோர்வடையும் மட்டங்களை எய்திய தேயிலை விலைகள் 1992 இல் குறிப்பிடத்தக்களவுக்கு மீட்சியடையத் தவறிவிட்டன. இதன்படி கொழும்பு ஏலங்களில் அனைத்துத் தேயிலைகளினதும் சராசரி மொத்த

விலை சிறிதளவான 6 சதவீதத்தினால் மட்டும் 1991 இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 58.27 இலிருந்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 61.75 இற்கு அதிகரித்தது. எனினும், உண்மை நியதிகளில் இது 1991 இன் கிலோக் கிறாம் ஒன்றுக்கான சிஎஉ 1.02 இலிருந்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்று சிஎஉ 1.00 இற்கான 2 சதவீத வீழ்ச்சியாக அமைந்து ரூபா நியதிகளில் முழு விலை அதிகரிப்புக்கும் செலாவணி வீதத் தேய்வே காரணமென்பதனைக் காட்டு கிறது. இதேவேளையில், தேயிலையின் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலையும் 1991 இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கான ரூ. 84.03 இலிருந்து 1992 இல் 3 சத வீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 81.50 இற்கு வீழ்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில் இது இவ்விரு ஆண்டுக் காலப்பகுதிக்குமிடையில் கி. கி. ஒன்றிற்கு சிஎஉ 1.48 இலிருந்து கி.கி. ஒன்றிற்கு சிஎஉ 1.32 இற்கான 10.8 சதவீத வீழ்ச்சியாகும்.

1992 இல் சாதகமற்ற வானிலைத் தன்மைகளின் காரணமாக விளைச்சலில் ஏற்பட்ட மிகக் கணிசமான தாக்கத்தின் கீழ், தேயிலையின் உற்பத்திச் செலவு அதிகூடிய அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனவே, 1992 இல் தயாரிக்கப்பட்ட தேயிலையின் உற்பத்திச் செலவு கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 72.26 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது முன்னைய ஆண்டின் உற்பத்திச் செலவைவிட 19 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

தொடர்ச்சியான ஆற்றலின்மையினைப் பிரதிபலிக்கும் வகையில் 1992 இல் இறப்பர் உற்பத்தி 1,050 இலட்சம் கிலோக்கிறாம்களென மதிப்பிடப் பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிடச் சிறிதளவான 1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1992 இல் இறப்பர் உற்பத்தியின் மட்டம் அண்மைக்கால உச்ச உற்பத்தியான 1984 இல் பதிவு செய்யப்பட்ட 1,420 இலட்சம் கிலோக் கிறாம்களைவிடக் கணிசமான அளவு குறைவானதாகக் காணப்பட்டது. ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகள், அதனைத் தொடர்ந்து யூன், யூலையில் பெய்த கடும் மழை, சில உற்பத்திப் பிரதேசங்களில் பால் எடுப்போரின் பற்றாக்குறை, ஈரலிப்புப் பிரதேசத்தில் பொருளாதார நன்மை பயக்காத சில காணிகள் வேறு பயிர்களுக்கு மாற்றப்பட்டமை என்பன 1992 இன் மோசமான உற்பத்திச் செயலாற்றத்துக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளாக விளங்கின.

1992 இல் கொழும்பு ஏலங்களில் ஆர்.எஸ்.எஸ். 1 இன் சராசரி விலை 24 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 29.28 இற்கு அதிகரித்தவேளையில் ஆர்.எஸ்.எஸ். 2 இன் சராசரி விலை 26 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 28.89 இற்கு அதிகரித்தது. எனினும், இறப்பரின் அனைத்து வகைகளினதும் சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.) 1991 இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கான ரூ. 34.55 இலிருந்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 37.65 இற்கு 9 சதவீத அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்தது. உண்மை நியதிகளில் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சராசரி (க.ஏ.பெ.) விலை கிலோக்கிறாம் ஒன்றுக்கு சி.எ.உ. 0.61 இல் மாறாது காணப்பட்டதுடன் உயர்ந்த ரூபா விலையானது செலாவணி வீதத் தேய்வின் விளைவாகும் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப் படுத்துவதாக இருந்தது. இதேவேளையில் சிறு உடைமையாளர்களையும் உள் ளடக்கிய தனியார் துறையின் இறப்பர் உற்பத்திச் செலவு 1991 இன் கிலோக் கிறாம் ஒன்றுக்கான ரூ. 19.11 இலிருந்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 20.50 இற்கு 7 சத வீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத் துறையின் விரிவாக்கத்தின் காரணமாகப் படிப்படியாக அதிகரிக்கும் போக்கினைப் பேணும் வகையில் 1992 இல் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 285 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது இவ்வாண்டின் மொத்த இறப்பர் உற்பத்தியின் 27 சதவீதத்தினைக் குறித்துக் காட்டியது.

தெங்கு உற்பத்தி 1991 இன் 14 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1992 இல் 23,800 இலட்சம் காய்களுக்கு 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. தெங்கின் மேம்பட்ட வெளியீட்டிற்கு 1991 இல் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் சாதகமான வானிலைத் தன்மைகளின் காலங்கடந்த தாக்கத்தினைக் காரணமாகக் குறிப்பிடலாம். முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களில் உலர்த்திய தேங்காய்த் துருவலின் உற்பத்திக்குச் சமமான காய்கள் 1991 இன் 3,350 இலட்சம் காய்களிலிருந்து 1992 இல் 3,650 இலட்சம் காய்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெய்க்கானது இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 2,600 இலட்சம் காய்களிலிருந்து 3,440 இலட்சம் காய்களுக்கு 32 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிக்குச் சமமான காய்கள் 280 இலட்சம் காய்களுக்கு 26 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில் 1992 இல் உடன் காய்களின் ஏற்றுமதிகளும் 230 இலட்சம் காய்களுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

முன்னைய ஆண்டில் 33 சதவீதத்தினால் அதிகரித்த மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டுப் பொருட்களினதும் சராசரி ஏற்றுமதி விலை 1991 இன் காயொன்றிற்கான ரூ. 4.54 இலிருந்து 1992 இல் காயொன்றிற்கு ரூ. 6.61 இற்கு மேலும் 46 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதே நேரத்தில் 1991 இல் 57 சதவீதத்தினால் அதிகரித்த கொழும்புச் சந்தையில் உடன் தேங்காயின் சராசரி விலை 1992 இல் காயொன்றுக்கு ரூ. 4.25 இற்கு மேலும் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் 1992 இல் காயொன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு ரூ. 1.97 ஆக மதிப்பிடப்பட்டு 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

1992 இல் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய மூன்று மரபுவழிப் பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பான குறிப்பிடத்தக்க அபிவிருத்தி என்னவெனில் ஏற்றுமதி வரி சம்பந்தமான கொள்கையில் காணப்பட்ட பெரும் அடிப்படை மாற்றமாகும். இவ்வாண்டில் இப்பயிர்களின் மீதான ஏற்றுமதித் தீர்வை கீழ் நோக்கித் திருத்தப்பட்டு 1992 திசெம்பர் 22 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் முழுமையாக நீக்கப்பட்டது. வரலாற்று ரீதியில் இந்த மூன்று பெருந்தோட்டப் பயிர்களும் அரச அரசிறையின் முக்கிய மூலங்களாக விளங்கியமையினைக் கருத்திற் கொள்ளும்போது ஏற்றுமதித் தீர்வையிலிருந்து முழுமையாகவே விலக்களிக்கப்படுவதற்கான 1992 இன் கொள்கை மாற்றமானது உள்நாட்டுப் பொருளாதாரத்தின் இறைத் தொடர்பிலான அடிப்படை மாற்றமொன்றைக் குறித்துக் காட்டியதில் ஐயமில்லை. 1978 வரையிலான காலப் பகுதியில் பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதித் தீர்வையானது அரசின் மொத்த வரி அரசிறையில் பெரும்பாலும் 40 சதவீதத்திற்கு வகைகூறியதை நாம் நினைவு கூரலாம். அரசுக்கான வரி அரசிறையின் மூலமொன்றாக விளங்கிய இதனை 1992 திசெம்பரில் முற்றாக நீக்கியமையின் மூலம் இலங்கையின் பெருந்தோட்டப் பொருளாதாரத்தினை அரசின் வரவு செலவுத் திட்டத்துடன் பிரிக்க முடியாது இணைக்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்துள்ளது எனக் கொள்ள வேண்டும். வேறு வகையில் கூறின் 1992 திசெம்பரில் கொண்டு வரப்பட்ட மாற்றமானது பெருந்

தோட்டப் பொருளாதாரத்துக்கும் இலங்கையின் அரச நிதிக்கும் இடையில் காணப்பட்ட நெருங்கிய பிணைப்பினை முடிவுக்குக் கொண்டு வந்தது எனலாம். எனவே அரச செலவிற்கான பணத்தைப் பெறுவதற்குப் பெருந்தோட்டத்துறை மீது வரி விதிப்பது பொருத்தமானதா அல்லது பொருத்தமற்றதா என்பது பற்றி பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வந்த பெரும் விவாதமானது தற்போதைக் காயினும் நிறுத்தப்படும்.

1992 இல் 23 இலட்சம் மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்ட (1,120 இலட்சம் புசல்கள்) நெல் உற்பத்தி முன்னைய ஆண்டைவிட 2 சதவீதம் குறைவானதாகும். எனினும் உற்பத்தி வீழ்ச்சியானது பெரும்பாலும் 1992 சிறுபோகத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு இது உற்பத்தியில் 15 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. மாறாக 16.3 இலட்சம் மெற்றிக் தொன்கள் (780 இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்ட 1991/92 பெரும்போகத்தின் நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் பெரும்போகத்தின் வெளியீட்டினைவிட 5 சதவீதம் கூடியதாகும். பெரும்போகத்தின் நெல் உற்பத்தியின் அதிகரிப்புக்கு விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்பின் விரிவாக்கமே முதன்மைக் காரணமாக அமைந்த வேளையில் சிறுபோக உற்பத்தி வீழ்ச்சிக்கு விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்பு குறைவடைந்தமையும் ஆண்டின் முன் அரைப் பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகளும் காரணங்களாக அமைந்தன.

1991 இல் 66,450 மெற்றிக் தொன்களுக்கு உச்ச மட்டத்தை அடைந்த உள்நாட்டுச் சீனி உற்பத்தி 1992 இல் 10 சதவீதத்தினால் 59,700 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் நிலவிய கடும் வரட்சியானது ஆலையிலிடலுக்கான கரும்பின் அளவினைக் குறைவடையச் செய்ததுடன் கணிசமான அளவு குறைந்த வெளியீட்டையும் விளைவித்தது. உற்பத்தியின் வீழ்ச்சியானது பெல்வத்தைத் தொழிற்சாலையின் வெளியீடு 1991 இன் 43,964 மெற்றிக் தொன்களிலிருந்து 1992 இல் 34,217 மெற்றிக் தொன்களுக்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையிலும் கந்தளாய் தொழிற்சாலையின் வெளியீடு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 2,558 மெற்றிக் தொன்களிலிருந்து 2,387 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையிலும் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், மாறாகச் செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 57 சதவீதத்தினால் விரிவடைந்தமையின் முக்கிய காரணமாக 27 சதவீதத்தினால் 13,576 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த வேளையில் இங்குரான தொழிற்சாலையின் உற்பத்தி 2 சதவீதத்தினால் 9,520 மெற்றிக் தொன்களுக்குச் சிறிதளவால் அதிகரித்தது. 1992 இல் நாட்டின் மொத்தச் சீனி உற்பத்தியில் 23 சதவீதத்திற்குச் செவனகல தொழிற்சாலை வகை கூறியது. 1992 இல் செவனகல தொழிற்சாலையினது வெளியீட்டின் கடுமையான வீழ்ச்சிக்கு ஆலையிடக் கிடைக்கத்தக்கதாகவிருந்த கரும்பின் அளவு 27 சதவீதத்தினால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதற்கு தனிப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களினால் வழங்கப்பட்ட கரும்பின் அளவில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்டமையே பெருமளவு காரணமாகும்.

கிடைக்கத்தக்கதாக உள்ள ஏற்றுமதித் தரவுகளின்படி 1992 இல் பல சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. மொத்தச் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மிகப் பெரிய பங்கிற்கு வகைகூறிய கறுவாவின் ஏற்றுமதி 1992 இல் 2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 10,408 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இதேவேளையில் கோப்பி, மிளகு, சாதிக்காய் என்பனவற்றின் ஏற்றுமதித் தொகைகளும் முறையே 8 சதவீதத்தினாலும், 9 சதவீதத்தினாலும், 7 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும் கொக்கோவின் ஏற்றுமதித் தொகை இவ்வாண்டில் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி 1992 இல் சிறு உணவுப் பயிர்கள் துறையின் செயலாற்றமானது ஓரளவு கலப்பானதாக இருந்தது. பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், குரக்கன், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டைவிட முறையே 28 சதவீத, 13 சதவீத, 10 சதவீத, 9 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இதேவேளையில் பயறு, சோயா அவரை, மிளகாய், எள்ளு, உழுந்து என்பனவற்றின் உற்பத்தி முறையே 35 சதவீத, 30 சதவீத, 29 சதவீத, 28 சதவீத, 19 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. இப்பயிர்களின் வெளியீட்டின் கணிசமான வீழ்ச்சிக்குக் குறைந்த சராசரி விளைச்சல், பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமை ஆகிய இரண்டும் காரணங்களாக அமைந்தன.

1992 இல் கைத்தொழில் துறையானது பொருளாதாரத்தில் முக்கிய வளர்ச்சித் துறையாகத் தொடர்ந்து தனது இயக்க ஆற்றலைக் காட்டியதுடன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளின் உயர்ந்த மட்டங்களையும் கொண்டுள்ளது. 1991 இல் உண்மை நியதிகளில் 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 1992 இல் மேலும் 12 சதவீதத்தினால் விரிவடைந்தது. எனினும், மீண்டும் கைத்தொழில் உற்பத்தியில் வளர்ச்சியானது முழுமையாகவே தனியார்துறைக் கைத்தொழிலைச் சார்ந்து இருந்தது. மொத்தத்தில், உண்மை நியதிகளில் தனியார் துறைக் கைத்தொழில்களின் வெளியீடு 20 சதவீதத்தினால் அதிகரித்ததோடு 1985 இலிருந்து பதிவு செய்யப்பட்ட அதி உயர் வளர்ச்சி வீதமாகவும் விளங்கியது. மாறாக அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீடு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1992 இல் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத்துறைகளாவன: புடவைகளும் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் (31 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (20 சதவீதம்), மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் (15 சதவீதம்), தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள், அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் (ஒவ்வொன்றும் 14 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (9 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (1 சதவீதம்) என்பனவாகும். வெளியீட்டில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்த ஒரேயொரு துணைத்துறை இரசாயனம், பெற்றோலியம், பிளாத்திக்குப் பொருட்கள் துறை (5 சதவீதம்) ஆகும்.

உண்மை நியதிகளில் வெளியீட்டில் 20 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த தனியார்துறையில் அதியுயர்ந்த வளர்ச்சி வீதத்தைக் காட்டிய உற்பத்தி வகைகளாக புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள், இரசாயனம், இறப்பர், பிளாத்திக்குப் பொருட்கள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின. இதேவேளையில், தனியார் துறைக் கைத்

தொழிலில் உணவு, குடிபானம், புகையிலைத் துணைத்துறை 1992இல் மோசமான உற்பத்திச் செயலாற்றத்தைப் பதிவு செய்தமைக்கு ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியே ஓரளவு காரணமாக அமைந்தது. புகையிலை, சீனி, வெறியக் குடிவகை, பண்ணை உற்பத்திப் பொருட்கள் போன்ற உற்பத்தி வகைகளில் இது பெருமளவில் பிரதிபலிக்கப்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட முறையினைப் பின்பற்றும் வகையில் 1992 இல் உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1991 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் வீழ்ச்சி 8 சதவீதமாக விளங்கியது. 1992 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் கடுமையான வீழ்ச்சியானது பல முக்கியமான அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள் தனியார் மயமாக்கப்பட்டமையினதும் மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏறத்தாழ 65 சதவீதத்திற்கு வகைகூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு கணிசமாக வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும்.

வெளியீட்டில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாக அரச இறப்பர் தயாரிப்பு (40 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (18 சதவீதம்), இலங்கைக் கனிப்பொருள் மணல் (34 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (3 சதவீதம்) என்பன விளங்கின. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய் வடிகலப் பிரிவின் பாரிய திருத்தமொன்றிற்காக 1992 இன் இரண்டாம் அரைப் பகுதியில் 14 வாரங்கள் தூய்மி மூடப்பட்டமையே முக்கிய காரணமாக அமைந்தது.

1992 இல் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட மாற்றல்கள் ரூ. 740 இலட்சமாக விளங்கியதோடு இது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களைவிட 61 சதவீத அதிகரிப்புமாகும். இம் மாற்றல்களின் மூலம் நன்மை பெறுநர்களாகத் தேசிய புடவைக் கூட்டுத்தாபனம், தேசிய தாள் கூட்டுத்தாபனம் என்பன விளங்கி முறையே ரூ. 420 இலட்சத்தினையும், ரூ. 320 இலட்சத்தினையும் பெற்றுக் கொண்டன.

''ஒருமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு'' நிலையமாகத் தொழிற்படும் இலங்கை முதலீட்டுச் சபை முதலீட்டாளர்களுக்குத் தொடர்ந்தும் பல தரப்பட்ட ஊக்குவிப்புக்களையும் சலுகைகளையும் வழங்கியது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் (சிறப்பு ஊக்குவிப்புக்கள் திட்டம்) பிரிவு 17 இன் கீழ், 1992 இல் முதலீட்டுச் சபை 291 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1992 இன் இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 702 இற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றில் கைத்தொழில்களை நிறுவுவதற்காக முதலீட்டுச் சபையுடன் 398 செயற்றிட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களுக்குக் கைச்சாத்திடப்பட்டிருந்தன. 1991 இன் 153 உடன் ஒப்பிடுகையில் 1992 இன் இறுதியில் மொத்தம் 211 கைத்தொழில் முயற்சிகள் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. செயற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களில் 79 கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தினுள்ளும், 38 பியகம ஊக்குவிப்பு வலயத்தினுள்ளும், 8 கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும், 86 நாட்டின் ஏனைய பாகங்களிலும் காணப்பட்டன. 1992 இல் முதலீட்டுச் சபையின் கைத்தொழில் முயற்சிகளில் தொழில்நிலை 22 சதவீதத்தினால் அதிகரித்ததோடு இத்தொழில் முயற்சிகளில் ஊழியர்களின் மொத்த

எண்ணிக்கை 104,220 இற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றில் 62,280 அல்லது 60 சதவீதம் புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் துறையில் காணப்பட்டது.

பொருளாதாரத்தில் தொடர்ச்சியான விலைத் தாக்கமானது 1992 இல் பொருளாதார முகாமைத்துவத்தில் அக்கறை கொள்ள வேண்டிய விடயமொன்றாகக் காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு.) ஆண்டுச் சராசரி அதிகரிப்பு வீதம் 1991 இன் 12.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 11.4 சதவீதமாக விளங்கியது. இதேவேளையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் (1991 திசெம்பரைவிட 1992 திசெம்பர்) இச்சுட்டெண் 1991 இன் 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 13.8 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஆண்டுச் சராசரி மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (மொ.வி.வி.சு.) 1991 இன் 9.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீதத்தினால் அதிகரித்து முதலாந்தரச் சந்தை மட்டத்திலுமான விலைத்தாக்கத்தைத் தெளிவாகக் காட்டியது.

1992 இல் நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பானது சிறப்பாக ஆண்டின் இறுதிப் பாகத்தில் உணவு வகைகளின் அதிகரிப்பின் முதன்மைக் காரணத்தினால் ஏற்பட்டதாகும். உணவு விலைகளின் அதிகரிப்பு மொத்த அதிகரிப்பில் 73 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த வேளையில் புடவைகள், எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை விடயங்கள் என்பனவற்றின் பங்களிப்புக்கள் முறையே 3.3 சதவீதமாகவும், 2.7 சதவீதமாகவும், 21.0 சதவீதமாகவும் விளங்கின. சுட்டெண்ணில் 61.9 சதவீத அதிகூடிய நிறையைக் கொண்ட உணவுக்கான துணைச் சுட்டெண் 1992 இல் 11.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

1992 இல் புடவைகள், எரிபொருள் வெளிச்சம் என்பனவற்றிற்கான துணைச் சுட்டெண்களின் அதிகரிப்பு 1991 இனைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாக இருந்தது. 1991 இன் 11.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் புடவைக்கான துணைச் சுட்டெண் 6.7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இதேவேளையில் எரிபொருள் வெளிச்சத்துக்கான துணைச் சுட்டெண் 1991 இன் 16.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 1992 இல் பல்வகை விடயங்கள் வகையின் துணைச் சுட்டெண்ணில் ஒப்பீட்டு ரீதியில் கூடிய 15.1 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கலால் தீர்வை, மற்றும் பாதுகாப்புத் தீர்வை என்பனவற்றின் மேல்நோக்கிய திருத்தத்தின் ஓரளவு காரணத்தினால் இவ்வகையின் வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலை விலைகளில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

1991 இன் 9.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 8.8 சதவீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக 1992 இல் பொருளாதாரத்தின் விலைத் தாக்கமானது முதலாந்தரச் சந்தையிலும் பிரதிபலிக்கப்பட்டது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் ஓராண்டுக்கு முன்னான 8.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 திசெம்பரில் இச் சுட்டெண் 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் இந்த அதிகரிப்பானது மீண்டும் உணவு விலைகளில் பெருமளவில் பிரதிபலிக்கப்பட்டதோடு உணவுக்கான துணைச் சுட்டெண் 1991 இன் 8.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது. உணவுக்

கான துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு நெல், தேங்காய், தேங்காய் எண்ணெய், மரக்கறி வகைகள், மீன் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெருமளவுக்குக் காரணமாக அமைந்தது.

1992 இல் கூலி வீதச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறு அரசதுறை ஊழியர்களின் கூலிகளின் வளர்ச்சி 1991 இனை விடக் குறைவானதாக இருந்தது. உண்மையில் விலைகளின் அதிகரிப்புக்களை இழப்பீடு செய்வதற்குக் கூலி அதிகரிப்புக்கள் போதுமானதாகக் காணப்படாததோடு அரசதுறை ஊழியர்களின் அனைத்துத்து வகையினரதும்உ ண்மைக் கூலிகள் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தன. அனைத்து மத்திய அரச ஊழியர்களினதும் பொதுவான பெயரளவுக் கூலிகள் 1991 இன் 12.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 4.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன்படி மத்திய அரச ஊழியர்களின் உண்மைக் கூலிவீதச் சுட்டெண் 1992 இல் 6.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கையில் 1991 இல் உண்மைக் கூலிவீதச் சுட்டெண் மாறாது காணப்பட்டது. 1992இல் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் பெயரளவுக் கூலிவிதச் சுட்டெண் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆனால் உண்மைக் கூலி வீதச் சுட்டெண் 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1992 இல் கூலி நிர்ணயச் சபைகளில் உள்ளடக்கப்பட்ட வர்த்தகங்களை உள்ளடக்கிய நன்கமைந்த தனியார் துறையில் கூலி நிர்ணய சபையில் உள்ள பல வர்த்தகங்களுக்கும் பிரயோகிக்கப்படக்கூடிய ஆகக் குறைந்த கூலி வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. கூலி நிர்ணய சபையினால் உள்ளடக்கப்பட்ட அனைத்து வர்த்தகங்களுக்குமான பொதுவான பெயரளவுக் கூலிகள் 1991 இன் 14.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 13.7 சதவீதத்தினால் அதிகரித்தன. விலை மட்டங்களின் தாழ்ந்த அதிகரிப்பின் காரணமாகப் பொதுவான உண்மைக் கூலிச் சுட்டெண் 1991 இன் 2.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி 1992 இல் தனியார் துறையின் தொழில்நிலை கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் அரசதுறையின் தொழில் நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. 1992 இறுதியில் 1,288,337 என மதிப்பிடப்பட்டுள்ள அரச துறையில் மொத்தத் தொழில் நிலை முன்னைய ஆண்டைவிட 1.4 சதவீதம் குறைவானதாகும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசதுறை ஊழியர்கள் தனியார் துறையின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்டமையினை இந்த வீழ்ச்சிகள் பெருமளவுக்குப் பிரதிபலித்தன. மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண அரசுகள், உள்ளூராட்சிச் சபைகள் துணைத்துறைகள் என்பனவற்றின் ஊழியர்களை உள்ளடக்கிய அரச நிறுவனங்களின் தொழில்நிலை 1992 இன் இறுதியில் 653,959 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1991 இனைவிடச் சிறிதளவான 0.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதேவேளையில் அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடரும் வகையில் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரசுடைமையாக்கப்பட்ட வணிக முயற்சிகள், அரச வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 1991 இனைவிட 3.1 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

Central Bank of Sri Lanka
22692
11 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department



தனியார் துறையின் தொழில் நிலையின் மீதான காலத் தொடர் தரவுகள் இல்லாமையின் காரணமாக நன்கமைந்த தனியார் துறையில் தொழில் நிலையினை மதிப்பிடுவதற்காக ஊழியர் சேம நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஊழியர்கள் போன்ற குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஊழியர் சேமநிதியத்தில் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1990 இன் 1,267,835 இலிருந்து 1991 இல் 1,341,086 இற்கு அதிகரித்துள்ளதுடன் 5 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. இதேவேளையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட சேம நிதியங்களின் கீழ் வரும் தனியார் துறையின் மொத்தத் தொழில்நிலை 1992 இல் 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக 1992 இல் தனியார் துறையின் தொழில்நிலை கணிசமான வளர்ச்சியினைக் காட்டியுள்ளது. இதே நேரத்தில் இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்படும் தொழில் முயற்சிகளின் தொழில்நிலை 1992 இல் தொடர்ந்து விரிவடைந்தது. 1992 இன் இறுதியில் 104,220 ஆக விளங்கிய இந்தத் தொழில் முயற்சிகளில் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1991 இனைவிட 22 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

சிறப்பான ஏற்றுமதிச் செயலாற்றம், வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு ஆகிய இரண்டினதும் பற்றாக்குறையின் குறைப்பு, தனியார் வெளிநாட்டு மூலதனத்தின் அதிகரித்த பாய்ச்சல், தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் மிகக் கூடிய பொது மிகை என்பன 1992 இன் சென்மதி நிலுவைச் செயலாற்றத்தின் நன்கு புலப்படும் விடங்களாக அமைந்தன. இறக்குமதிச் செலவின் 10 சதவீத விரிவாக்கத்திற்கு எதிராக ஏற்றுமதி வருவாய்களின் 20 சதவீத அதிகரிப்பானது வர்த்தகப் பற்றாக்குறையை 1991 இன் சிஎஉ 7,260 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 6,860 இலட்சத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. இதேவேளையில் பணிகள் கணக்கும் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைப் பதிவு செய்ததோடு பற்றாக்குறை 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் சிஎஉ 660 இலட்சத்திலிருந்து சிஎஉ 200 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சாதகமான இந்த அபிவிருத்திகளுடன், தனியார் மாற்றல்களின் பேரிலான அதிகரித்த தேறிய உட்பாய்ச்சல்களும் இணைந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை 1991 இன் சிஎஉ 3,520 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 2,460 இலட்சத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. மேம்பட்ட நடைமுறைக் கணக்கு நிலைமையானது சாதகமான மூலதனக் கணக்கில் சிறப்பாகத் தனியார் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சலுடன் சென்மதி நிலுவையில் சிஎஉ 1,290 இலட்சம் கொண்ட பொது மிகையொன்றினை உருவாக்கியதன் விளைவாக நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளில் அதிகரிப்பொன்றை ஏற்படுத்தியது.

ஏற்றுமதிகளின் கூடிய அதிகரிப்பினதும் இறக்குமதிகளின் சார்பு ரீதியில் மெதுவான அதிகரிப்பினதும் தாக்கத்தின் கீழ் 1992 இல் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை குறுகியது. மூன்று ஆண்டுகளின் படிப்படியான வீழ்ச்சியினைத் தொடர்ந்து 1991 இல் வர்த்தகக் கணக்கு மிக விரிவான குறைவைப் பதிவு செய்த அனுபவத்திலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும் 1992 இல் வணிக ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் 2 சதவீத சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20 சதவிதத்தினால் சிஎஉ 17,820 இலட்சத்திற்கு(ரூ. 1,100,520 இலட்சம்) கணிசமாக அதிகரித்தது. இதேவேளையில் முன்னைய ஆண்டின் 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் மீதான செலவு 10 சதவீதத்தால் சிஎஉ 24,680 இலட்சத்திற்கு (ரூ. 1,524,070 இலட்சம்) அதிகரித்தது. இதன்படி, வர்த்தகக் கணக்கின் மீதான பற்றாக்குறை 1991 இன்

சஊஉ 7,470 இலட்சத்திலிருந்து 1992 இல் சஊஉ 6,860 இலட்சத்திற்குச் சுருங்கியது. இதே நேரத்தில் 1990 இன் 74 சதவீதத்திலிருந்து 1991 இல் 66 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கான ஏற்றுமதி வருவாய்களின் விகிதம் 1992 இல் மீண்டும் 72 சதவீதத்திற்கு மாற்றமடைந்தது. இதேவேளையில் இலங்கையின் ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் பொதுவான விலை அசைவுகள் சாதகமாகக் காணப்பட்டதுடன் வர்த்தக நியதிகளில் 3.7 சதவீத மேம்பாட்டினை விளைவித்தன.

சுங்கத் தரவுகளின்படி 1992 இல் ஏற்றுமதித் துறையின் செயலாற்றம் கலப்பானதாக இருந்தது. வேளாண்மை ஏற்றுமதிகள் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் கவர்ச்சிகரமான வளர்ச்சியினைப் பதிவு செய்தன. பெருந்தோட்டப் பயிர்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், இரத்தினக்கற்கள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் முறையே 23 சதவீதத்தினாலும் 5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. எனினும், புடவைகள் ஆடைகள் ஏற்றுமதியில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்ட வேளையில் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளும் சிறு வேளாண்மை ஏற்றுமதிகளும் இவ்வாண்டில் கணிசமான அதிகரிப்புக்களைக் காட்டின.

சுங்கத் தரவுகளின்படி தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சஊஉ 3,160 இலட்சத்திலிருந்து (ரூ. 178,670 இலட்சம்) 1992 இல் சஊஉ 2,410 இலட்சத்திற்கு (ரூ. 148,930 இலட்சம்) 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வருவாய்களின் கடுமையான வீழ்ச்சிக்குத் தொகை, விலை ஆகிய இரண்டினதும் வீழ்ச்சிகள் பங்களிப்புச் செய்தன. தேயிலை ஏற்றுமதியின் அளவு 1991 இன் 2,120 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 1992 இல் 1,820 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை இவ்விரு ஆண்டுகளுக்கு மிடையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு சஊஉ 1.49 இலிருந்து (கிலோக்கிறாம் ஒன்று ரூ. 84.12) கிலோக்கிறாம் ஒன்று சஊஉ 1.33 இற்கு (கிலோக்கிறாம் ஒன்று ரூ. 81.98) 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. விலை வீழ்ச்சியானது மோசமான உலக சந்தை நிலைமைகள், தேயிலைத் தரத்தின் வீழ்ச்சி போன்ற முதன்மைக் காரணிகளால் முக்கியமாக ஏற்பட்டதாகும். இதேவேளையில் 1991 இன் 18 சதவீத கடுமையான வீழ்ச்சிக்கு மாறாக இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சஊஉ 470 இலட்சத்திலிருந்து (ரூ. 26,410 இலட்சம்) 1992 இல் சஊஉ 480 இலட்சத்திற்கு (ரூ. 29,600 இலட்சம்) 2 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்தது. இது முற்றாக இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ஏற்றுமதித் தொகை 760 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 790 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். ஒப்பீட்டு நோக்கில் இவ்விரு ஆண்டுகளிலும் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை கிலோக்கிறாம் ஒன்றுக்கு சஊஉ 0.61 இல் மாறாது காணப்பட்டது. பல கைத்தொழில் நாடுகளின் தொடர்ச்சியான பொருளாதாரப் பின்னடைவு நிலைமைகள் இறப்பரின் ஏற்றுமதி விலையினை மோசமான மட்டங்களில் வைத்திருப்பதற்குப் பங்களிப்புச் செய்தன. பெருந்தோட்டப் பயிர் வகைகளினுள் 1992 இல் தெங்கு மட்டுமே கணிசமான அளவு ஆற்றலைக் காட்டியதுடன் ஏற்றுமதி வருவாய்கள் 1991 இன் சஊஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 26,190 இலட்சம்) 1992 இல் சஊஉ 600 இலட்சத்திற்கு (ரூ. 36,910 இலட்சம்) 30 சதவீதத்தினால் அதிகரித்தன. சாதகமான இவ்வேற்றுமதிச் செயலாற்றத்துக்குத் தொகை, விலை ஆகிய

இரண்டினதும் அதிகரிப்புக்கள் பங்களிப்புச் செய்தன. ஏற்றுமதித் தொகைக்குச் சமமான காய்கள் 12 சதவீதத்தினால் 1991 இன் 3,670 இலட்சம் காய்களி லிருந்து 1992 இல் 4,120 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தன. இதேவேளையில் தேங்காய் ஒன்றிற்குச் சமனான சராசரி விலைகள் 1992 இல் 11 சதவீதத்தினால் அதிகரித்து, காயொன்றுக்கு சிஎஉ 0.10 ஆக விளங்கியது. உலக சந்தையில் தேங்காய்க்கான விலைகள் முன்னேற்றமடைந்ததற்கு உலக சந்தைக்கான முக்கிய தேங்காய் ஏற்றுமதியாளரான பிலிப்பைன்சின் உற்பத்தியில் ஏற்பட்ட கடுமை யான வீழ்ச்சியே பெருமளவு காரணமாக அமைந்தது.

1992 இல் சிறப்பாகத் தேயிலை, இறப்பர் ஆகிய பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதிச் செயலாற்றம் மோசமானதாக இருந்தவேளையில் சிறு வேளாண்மை உற்பத்திகள் துறை கணிசமான மேம்பாட்டினைப் பதிவு செய்தது. இந்த ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 600 இலட்சத்திலிருந்து (ரூ. 34,090 இலட்சம்) 1992 இல் சிஎஉ 780 இலட்சத்திற்கு (ரூ. 48,380 இலட்சம்) 30 சதவீதத்தினால் அதிகரித்தது. தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் கறுவா என்பன சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான மொத்த வருவாய்களின் முறையே 35 சதவீதத்திற்கும், 31 சதவீதத்திற்கும் வகைகூறின. பழ வகைகள், சாதிக்காய், சாதிப்பத்திரி மற்றும் எள்ளு, வெற்றிலை என்பன வற்றிலிருந்தான வருவாய்களிலும் கணிசமான அதிகரிப்புக்கள் அவதானிக்கப் பட்டன.

அதிகூடிய இயக்க ஆற்றலைப் புலப்படுத்தும் வகையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 8,960 இலட்சத்திலிருந்து (ரூ. 507,360 இலட்சம்) 1992 இல் சிஎஉ 12,270 இலட்சத்திற்கு (ரூ. 757,760 இலட்சம்) 37 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரிப்பின் மிகப் பெரும் பங்கு புடவைகள் ஆடைகள் ஏற்றுமதிகளில் பிரதிபலிக்கப்பட்டதோடு இது இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 5,880 இலட்சத்திலிருந்து (ரூ. 332,610 இலட் சம்) சிஎஉ 8,520 இலட்சத்திற்கு (ரூ. 525,880 இலட்சம்) 45 சதவீதத்தினால் அதிகரித்தது. வைரங்கள், உணவு, குடிபானம், புகையிலை, இரசாயன உற்பத்திப் பொருட்கள் மற்றும் தோல், இறப்பர் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 32 சத வீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் முக்கியமாகப் பேணல் நோக்கங் களுக்காகத் தூய்மி மூடப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டமையால் பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 580 இலட்சத்திலிருந்து (ரூ. 32,890 இலட்சம்) 1992 இல் சிஎஉ 450 இலட்சத் திற்கு (ரூ. 27,710 இலட்சம்) 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதே நேரத்தில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 1991 இன் சிஎஉ 450 இலட்சத்திலிருந்து (ரூ. 25,620 இலட்சம்) 1992 இல் சிஎஉ 440 இலட்சத்திற்கு (ரூ. 27,490 இலட்சம்) 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 1991 இன் சிஎஉ 420 இலட்சத்திலிருந்து (ரூ. 23,580 இலட்சம்) 1992 இல் சிஎஉ 400 இலட்சத்திற்கு (ரூ. 24,820 இலட்சம்) 5 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்த இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகளில் இது முக்கியமாகப் பிரதிபலிக்கப் பட்டது.

இந்த அபிவிருத்திகளைத் தொடர்ந்து, 1992 இல் ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் கணிசமான மாற்றத்திற்கு உள்ளாகியது. முதன்மை ஏற்றுமதி வகையாகக் கைத்தொழில் ஏற்றுமதிகள் வகை தனது நிலையினை உறுதிப்படுத்திக் கொள்வதில் மேலும் முன்னேற்றம் கண்டதோடு அதனது பங்கு 1991 இன் 60 சதவீதத்திலிருந்து 1992 இல் 69 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில் கடந்த அண்மைக் காலங்களில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 1991 இன் 32 சதவீதத்திலிருந்து 1992 இல் 24 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. புடவைகளும் ஆடைகளும் தனியான விடயமொன்றாகத் தனது முதன்மை நிலைமையினைப் பேணியதோடு மொத்த ஏற்றுமதிகளில் அதனது பங்கு 1991 இன் 39 சதவீதத்திலிருந்து 1992 இல் 48 சதவீதத்திற்கு அதிகரித்தது.

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவு 1991 இன் சிஎஉ 22,370 இலட்சத்துடன் (ரூ. 1,266,430 இலட்சம்) ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 24,680 இலட்சமாக (ரூ. 1,524,070 இலட்சம்) விளங்கியது. நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் ஆகிய மூன்று வகை இறக்குமதிப் பொருட்களிலும் இவ்வதிகரிப்புப் பிரதிபலிக்கப்பட்டது. நுகர்வுப் பொருட்களின் மீதான செலவு 8 சதவீதத்தினால் 1991 இன் சிஎஉ 5,720 இலட்சத்திலிருந்து (ரூ. 323,570 இலட்சம்) 1992 இல் சிஎஉ 6,150 இலட்சத்திற்கு (ரூ. 379,950 இலட்சம்) அதிகரித்தது. முன்னைய ஆண்டைவிட 15 சதவீத அதிகரிப்பைக் காட்டிய உணவல்லா விடயங்களிலேயே இது பெருமளவு பிரதிபலிக்கப்பட்டது. உணவு, குடிபானம் வகையில் சீனி இறக்குமதிகளின் மீதான செலவு வீழ்ச்சியடைந்த வேளையில் அரிசி இறக்குமதிகளின் மீதான செலவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. வரட்சியின் கடுமையான தாக்கத்தின் காரணமாக உள்நாட்டு வழங்கல்கள் குறைவடைந்தமையின் விளைவாக அரிசி இறக்குமதிகளின் தொகை 77 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் அரிசியின் விலை 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து அரிசி இறக்குமதிகள் மீதான இறக்குமதிச் செலவை முன்னைய ஆண்டின் சிஎஉ 280 இலட்சத்துடன் (ரூ. 15,890 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 460 இலட்சத்திற்கு (ரூ. 28,520 இலட்சம்) கட்டுப்படுத்தியது. இதேவேளையில் சீனி இறக்குமதிகளின் தொகை 3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் விலை 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து சீனி மீதான இறக்குமதிச் செலவை 1991 இன் சிஎஉ 910 இலட்சத்திலிருந்து (ரூ. 51,390 இலட்சம்) 1992 இல் சிஎஉ 800 இலட்சத்திற்கு (ரூ. 49,520 இலட்சம்) குறைவடையச் செய்தது. அடிப்படை உணவு விடயங்களின் மீதான இறக்குமதிச் செலவின் சிறிதளவான அதிகரிப்பின் சூழலில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான அதிகரித்த செலவானது ஏனைய நுகர்வுப் பொருட்களில் பெருமளவு பிரதிபலிக்கப்பட்டதோடு அதன் பெறுமதி 1991 இன் சிஎஉ 2,760 இலட்சத்திலிருந்து (ரூ. 156,070 இலட்சம்) 1992 இல் சிஎஉ 3,170 இலட்சத்திற்கு (ரூ. 195,990 இலட்சம்) 15சத வீதத்தினால் அதிகரித்தது. இந்த வகையில் பாரிய அதிகரிப்புக்களைக் காட்டிய விடயங்களாவன: வானொலிப்பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் (18 சதவீதம்), இறப்பர்ரயர்கள், ரியூப்புக்கள் (15 சதவீதம்), வைத்திய மற்றும் மருந்தாக்கல் உற்பத்திப்பொருட்கள் (28 சதவீதம்) ஏனைய நுகர்வுப் பொருட்கள் (15 சதவீதம்) என்பனவாகும்.

1992 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ 12,420 இலட்சமாக விளங்கி (ரூ. 767,020 இலட்சம்) முன்னைய ஆண்டைவிட 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அதிகூடிய அதிகரிப்புக்களைக் காட்டிய விடயங்களாவன: கோதுமை மற்றும் இறுங்கு, சாயமூட்டல், தோல் பதனிடல் மற்றும் நிறமூட்டல் பொருட்கள், புடவைகள் ஆடைகள் மற்றும் இரசாய னங்கள் என்பனவாகும். கோதுமை மற்றும் இறுங்கு இறக்குமதிகள் மீதான செலவு 1991 இன் சிஎஉ 580 இலட்சத்திலிருந்து (ரூ. 33,030 இலட்சம்) 1992 இல் சிஎஉ 740 இலட்சத்திற்கு (ரூ. 45,490 இலட்சம்) 28 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சாயமூட்டல் பதனிடல் மற்றும் நிறமூட்டல் பொருட்களின் மீதான செலவு 56 சதவீதத்தினால் சிஎஉ 160 இலட்சத்திலிருந்து (ரூ. 9,280 இலட்சம்) சிஎஉ 260 இலட்சத்திற்கு (ரூ. 15,840 இலட்சம்) அதிகரித்தது. இதே வேளையில் உள்நாட்டுப் புடவைக் கைத்தொழிலின் மிக விரிவடைந்த நடவடிக்கைகளைப் பிரதிட லிக்கும் வகையில் புடவைகள் ஆடைகள் இறக்குமதிகளின் மீதான செலவு 1991 இன் சிஎஉ 3,640 இலட்சத்திலிருந்து (ரூ. 206,110 இலட்சம்) 1992 இல் சிஎஉ 4,340 இலட்சத்திற்கு (ரூ. 267,940 இலட்சம்) 19 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இரசாயன உற்பத்திப் பொருட்கள் மீதான செலவு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 640 இலட்சத்திலிருந்து (ரூ. 36,430 இலட்சம்) சிஎஉ 670 இலட்சத்திற்கு (ரூ. 41,460 இலட்சம்) 14 சதவீத அதிகரிப் பைப் பதிவு செய்தது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவு 1991 இன் சிஎஉ 5,260 இலட்சத்திலிருந்து (ரூ. 297,920 இலட்சம்) 1992 இல் சிஎஉ 6,090 இலட்சத்திற்கு (ரூ. 375,960 இலட்சம்) 16 சதவீதத்தினால் அதிகரித்தது. முதலீட்டுப் பொருட்களில் மிகப்பெரிய அதிகரிப்பு பொறிகள் கருவிகளில் காணப் பட்டதுடன் அதனது பெறுமதி இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 33 சதவீதத் தினால் சிஎஉ 2,100 இலட்சத்திலிருந்து (ரூ. 118,810 இலட்சம்) சிஎஉ 2,790 இலட்சத்திற்கு (ரூ. 172,000 இலட்சம்) அதிகரித்தது. இவ்வாண்டில் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவு 7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் போக்குவரத்துக் கருவிகள் மீதான செலவு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியான தாராளமய மாக்கலினதும் பொருளாதாரத்தின் பொதுவான விரிவாக்கத்தினதும் காரண மாகப் பணிகள் கணக்கில் பெறுகைகள், கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலும் கணிசமான அதிகரிப்புக்கள் காணப்பட்டன. துறைமுகம், போக்குவரத்து, காப் புறுதி வகையில் துறைமுக வருவாய்கள் உயர்வடைந்தமையின் காரணமாகப் பெறுகைகள் 1991 இன் சிஎஉ 1,500 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 1,570 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேவேளையில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 24 சதவீத அதிகரிப்புக் காரணமாகச் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் சிஎஉ 240 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,400 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதே நேரத்தில் ''ஏனைய'' பணிகள் மீதான உட்பாய்ச்சல்கள் சிஎஉ 100 இலட்சத்தி லிருந்து சிஎஉ 1,270 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில் முதலீட்டு வருவாய் உட்பாய்ச்சல்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 400 இலட்சத்திலிருந்து சிஎஉ 480 இலட்சத்திற்கு அதிகரித்து நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் மேம்பட்ட நிலைமையினைப் பிரதிபலித்தன. இந்த மாற்றங்களின் இணைந்த தாக்கமாகப் பணிகள் கணக்கு வலுவடைந்ததோடு இது மேம்பட்ட வர்த்தகக் கணக்கு நிலுவையுடன் ஒன்று சேர்ந்து நாட்டின் சென்மதி நிலுவை நிலைமை யினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தது.

இதே வேளையில் 1992 இல் அதிகரித்த தனியார் பணவனுப்பல்களின் காரணமாக மாற்றல்கள் கணக்கு மேலும் முன்னேற்றமடைந்தது. தனியார் மாற்றல்கள் மீதான பெறுகைகள் 1991 இன் சிஎஉ 3,230 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,850 இலட்சத்திற்கு உயர்வடைந்து 19 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் மாற்றல்களின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் சிஎஉ 300 இலட்சத்திலிருந்து சிஎஉ 560 இலட்சத்திற்கு அதிகரித்தபோதிலும் தேறிய அடிப்படையில் தனியார் மாற்றல்கள் 1991 இன் சிஎஉ 2,930 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,300 இலட்சத்திற்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் அலுவல்சார் மாற்றல்கள் சிஎஉ 1,480 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,300 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சியின் மத்தியிலும் மாற்றல்கள் கணக்கு சிஎஉ 180 இலட்சம் கொண்ட பொது மிகையொன்றினைக் காட்டியதோடு தேறிய உட்பாய்ச்சல்கள் 1991 இன் சிஎஉ 4,410 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 4,590 இலட்சத்திற்கு அதிகரித்தன.

வர்த்தக, பணிகள் மற்றும் மாற்றல்கள் கணக்குகளின் மேம்பட்ட செயலாற்றம் காரணமாகச் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு 1991 இன் சிஎஉ 3,520 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 2,460 இலட்சம் கொண்ட குறைவான பற்றாக்குறையொன்றினைப் பதிவு செய்தது. 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாகப் பற்றாக்குறை 5.4 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொடைகள் நீங்கலான விகிதமும் இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 7.6 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் இவ் வீழ்ச்சியானது 1992 இல் பேரண்டப் பொருளாதார அரங்கில் மிகச் சாதகமான அபிவிருத்தியாகக் காணப்பட்டதோடு வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டுடன் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார விரிவாக்கத்தை எய்துவதனையும் சிறப்பாகக் குறித்துக் காட்டுகிறது.

நடைமுறைக் கணக்கின் மிகப் பரம்பலான முன்னேற்றங்களுக்கு மாறாக 1992 இல் மூலதனக் கணக்கின் அபிவிருத்திகள் ஓரளவு கலப்பானதாக இருந்தன. நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பாதகமானதொரு அபிவிருத்தியாகக் காணப்பட்டது. இது 1991 இன் சிஎஉ 4,750 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,410 இலட்சத்திற்கு சிஎஉ 1,340 இலட்சத்தினால் அல்லது 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது அரசுக்கான மூலதன உட்பாய்ச்சல்களில் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டதோடு இது இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் சிஎஉ 4,860 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,970 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் 1991 இன் பிற்பகுதியில் பெறப்பட்ட சிஎஉ 220 இலட்ச குறுங்கால இடைக்காலக் கடனின் தீர்ப்பனவையும் உள்ளடக்கிய அரச படுகடன் மீதான கடன் தீர்ப்பானவு 1991 இன் சிஎஉ 970 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 1,460 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனவே தேறிய அடிப்படையில் 1992 இல் அரசுக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் 1991 இன் சிஎஉ 3,880 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 1,510 இலட்சமாக மட்டுமே விளங்கியது. அரசுக்கான குறைந்த உட்பாய்ச்சல்களுக்கு முற்றிலும் மாறாக, தனியார் துறைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் 1992 இல் தொடர்ந்தும் மிகத் திடமாக வளர்ச்சியடைந்ததோடு நேரடி முதலீடுகள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் ஆகிய இரண்டும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு

செய்தன. 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் கொழும்புப் பங்குச் சந்தையின் மந்தமான நிலைமைகளின் பெருமளவு காரணமாகப் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் சிஎஉ 240 இலட்சத்திலிருந்து சிஎஉ 180 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த போதிலும் முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகளில் செய்யப்பட்ட நேரடி முதலீடுகளும் அண்மையில் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் உடைமையினைக் கைக்கொள்ளலும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து சிஎஉ 850 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேவேளையில் தனியார் துறைக்கான தனியார் நீண்டகாலக் கடன் மூலதனத்தில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டதோடு இத் தொகை 1991 இன் சிஎஉ 630 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 1,110 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதன்படி, தனியார் நீண்டகால மூலதனத்தில் 1991 இன் சிஎஉ 180 இலட்சம் கொண்ட வெளிப்பாய்ச்சலுக்கு மாறாக 1992 இல் சிஎஉ 180 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் ஒன்று காணப்பட்டது. மேலும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் தனியார் குறுங்கால மூலதனத்தின் தேறிய பயன்பாடு சிஎஉ 350 இலட்சத்திலிருந்து சிஎஉ 690 இலட்சத்திற்கு அதிகரித்தது.

தனியார்துறைக்கான பொதுவான தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 1991 இன் சிஎஉ 870 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 1,900 இலட்சமாக விளங்கியதுடன் இது சிஎஉ 1,030 இலட்சம் கொண்ட அதிகரிப்புமாகும். அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சலின் ஓரளவு நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்களை எய்துவதில் மூலதன வாக்கத்தின் வீதத்தினை அதிகரிப்பதற்காக வெளிநாட்டுத் தனியார் மூலதனத்தை ஈர்க்க வேண்டியதன் அவசியத்திற்கு 1991 இன் ஆண்டறிக்கையில் சிறப்பான கவனம் ஈர்க்கப்பட்டது. இந்தச் சூழலில் 1992 இன் தனியார் மூலதன உட்பாய்ச்சல் மிதமானதாகவே காணப்பட்டபோதிலும் இதனை வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகக் கணிக்கலாம்.

நடைமுறைக் கணக்கை விஞ்சும் வகையில் மூலதனக் கணக்கில் பெருமளவு மூலவளங்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளமையால் 1992 இல் நாட்டின் சென்மதி நிலுவை சிஎஉ 1,290 இலட்சம் கொண்ட பொதுமிகையினைப் பதிவு செய்தது. முறையே 1990 இலும், 1991 இலும் பதியப்பட்ட சிஎஉ 1,380 இலட்சம், சிஎஉ 1,520 இலட்சம் கொண்ட பொது மிகைகளுக்கு மேலாக இது காணப்பட்டது. இதேவேளையில் 1992 இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 2,380 இலட்சம் அல்லது 29 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்ததுடன் ஆண்டின் இறுதியில் வெளிநின்ற மட்டத்தை சிஎஉ 10,470 இலட்சத்திற்கு அதிகரிக்கச் செய்தது. இதே நேரத்தில் மத்திய வங்கியினாலும் அரசினாலும் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 5,030 இலட்சத்திலிருந்து சிஎஉ 6,810 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1992 இன் இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இற்கு மதிப்பிடப்பட்ட இறக்குமதிகளில் கிட்டத்தட்ட 4.7 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 3.1 மாத இறக்குமதிக்கு நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டன.

அட்டவணை 1.3

## சென்மதி நிலுவையின் தொகுப்பு 1989—1992

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயங்கள் | 1989 | 1990(அ) | 1991(அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) ... | – 24,050 (–530) | – 28,145 (–518) | – 41,252 (–726) | 42,355 (–685) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) ... | 129 (1) | 2,781 (51) | 3,594 (65) | 6,498 (106) |
| காரணிப் பணிகள் (தேறிய) ... | – 5,738 (–124) | – 6,685 (–123) | – 7,367 (–130) | 7,694 (–125) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... | 11,840 (258) | 14,518 (268) | 16,623 (293) | 20,369 (330) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) ... | 6,751 (147) | 7,142 (130) | 8,407 (148) | 8,027 (130) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... | – 11,069 (–248) | – 10,390 (–192) | – 19,995 (–352) | – 15,156 (–246) |
| மொத்த நிலுவை ... | - 1,905 (–67) | 7,480 (138) | 10,140 (152) | 9,191 (129) |

### சில முக்கிய குறிகாட்டிகள்

| | 1989 | 1990(அ) | 1991(அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|
| வர்த்தக மாற்று விகிதம் (1985=100) ... | 91.4 | 87.4 | 85.7 | 88.9 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் ... | 6,134 (133) | 10,393 (191) | 9,598 (170) | 11,167 (180) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை ... | 4.4 | 3.2 | 5.4 | 3.6 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்கு ... | 23,390 (447) | 34,472 (602) | 49,223 (809) | 66,236 (1,047) |
| பன்னாட்டு ஒதுக்குகள் – மாதங்களுக்கான இறக்குமதிகளில் ... | 3.1 | 3.7 | 4.4 | 5.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

1992 இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் யப்பானிய யென் நீங்கலாக அனைத்து முக்கிய நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி தளம்பலுற்றது. இது ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பாக ஐரோப்பாவில் தோன்றிய பன்னாட்டு நாணய நெருக்கடியின் விளைவாகும். இந்த மாற்றங்களின் பொதுவான தாக்கமானது இலங்கை ரூபாவை யப்பானிய யென்னுக்கெதிராக 8.4 சதவீதத்தினாலும், ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 7.4 சதவீதத்தினாலும், பிரான்சுப் பிராங்குக்கெதிராக 2.3 சதவீதத்தினாலும், டியூச் மார்க்கிற்கெதிராக 1.9 சதவீதத்தினாலும் பெறுமானத்தில் தேய்வடையச் செய்தது. இதே வேளையில் 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் ஸ்டேர்லிங் பவுணுக்

கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 14.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ இற்கெதிராக இலங்கை ரூபா 3.9 சதவீதத்தினால் பெறுமானத்தில் தேய்வடைந்தது.

1992 இன் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 50,290 இலட்சம் என மதிப்பிடப்பட்டதோடு இது இவ்வாண்டில் சிஎஉ 4,270 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்பாகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு மாறாக இவ்வதிகரிப்பின் பெரும் பங்கொன்று தனியார் துறையில், குறிப்பாக முதலீட்டுச் சபையின் கைத்தொழில் முயற்சிகளின் கீழ்வரும் எயர் லங்காவையும் உள்ளடக்கிய தனியார் துறையின் நடுத்தர நீண்டகாலப் படுகடனில் பிரதிபலிக்கப்பட்டது. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றிலிருந்தான சலுகை உதவி களின் பகிர்ந்தளிப்புக்களின் காரணமாக இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் அரசின் நடுத்தர, நீண்டகாலப் படுகடன் சிஎஉ 35,940 இலட்சத்திலிருந்து சிஎஉ 38,440 இலட்சத்திற்கு அதிகரித்தமை காரணமாகும். இவ்வாண்டில் பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் பன்னாட்டு நிதியத்திற்கான வெளிநின்ற படுகடனை 1991 இறுதியின் சிஎஉ 2,800 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,380 இலட்சத்திற்கு அதிகரிக்கச் செய்தன. இதேவேளையில் குறுங்காலப் படுகடனின் வெளிநின்ற மட்டம் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 3,500 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,990 இலட்சத்திற்கு அதிகரித்தது.

நடுத்தர நீண்டகாலப் படுகடனின் கடன் தீர்ப்பனவையும் அனைத்து வெளிநாட்டுப் படுகடனின் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய இலங்கை யின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1992 இல் சிஎஉ 230 இலட்சத்தினால் சிஎஉ 3,790 இலட்சத்திற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பானது முழுமையாகவே கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் பிரதிபலிக்கப்பட்டது. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 14 சதவீதத்தினால் 1991 இன் சிஎஉ 2,000 இலட்சத்தி லிருந்து 1992 இல் சிஎஉ 2,280 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 50 இலட்சத்தினால் அல்லது 3 சதவீதத்தினால் சிஎஉ 1,510 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பானது அரச மற்றும் தனியார்துறைப் படுகடன் ஆகிய இரண் டிலும் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், இவ்வாண்டில் பணிக் கொடுப்பனவு அதிகரித்த போதிலும் பொருட்கள் பணிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளி லிருந்தான உயர்ந்த வருவாய்கள் படுகடன் பணி விகிதத்தை 1991 இன் 18.5 சதவீதத்திலிருந்து 1992 இல் 16.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தன. பொருட்கள், பணிகள், தனியார் மாற்றல்கள் என்பனவற்றின் ஏற்றுமதி களிலிருந்தான பெறுகைகளின் விகிதமாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 15.8 சதவீதத்திலிருந்து 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

பொருளாதார நடவடிக்கைகள் விரைவாக இடம்பெறுவதற்கு மிகச் சாதக மான சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்காக நாட்டின் வர்த்தக மற்றும் கொடுப்பனவு முறைகளை மேலும் தாராளமயப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு தொடர்ச்சியான கொள்கை வழிமுறைகள் 1992 இல் மேற்கொள்ளப் பட்டன. வர்த்தகம் தொடர்பாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களின் இறக்கு மதிகள் மீதான நாணயக் கடிதங்களுக்காக 100 சதவீத காசு வரையறைத் தேவைப்பாடு நீக்கப்பட்டு, அனைத்து வணிக இறக்குமதிகளுக்கும் பணிகளுக்கு

**அரசின் இறைத்**

| விடயம் | 1988 | 1989 |
|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... ... | 48,337 | 60,386 |
| மொத்த அரசிறை ... ... ... ... | 41,749 | 53,979 |
| வரி அரசிறை ... ... ... ... | 35,946 | 47,513 |
| வரியல்லா அரசிறை ... ... ... ... | 5,803 | 6,466 |
| கொடைகள் ... ... ... ... | 6,588 | 6,407 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... ... ... | 76,532 | 82,164 |
| நடைமுறை ... ... ... ... | 46,132 | 56,884 |
| மூலதனம் ... ... ... ... | 22,878 | 20,750 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் ... ... | 7,522 | 4,530 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... ... ... | – 4,383 | – 2,905 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) ... ... ... ... | – 34,783 | – 28,185 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்குப்பின்) ... ... ... ... | – 28,195 | – 21,778 |
| நிதியிடல் ... ... ... ... | 28,193 | 21,777 |
| வெளிநாட்டுக்கடன்பாடுகள் ... ... ... ... | 7,128 | 5,926 |
| உள்நாட்டுக்கடன்பாடுகள் ... ... ... ... | 21,065 | 12,373 |
| சந்தையல்லாக்கடன்பாடுகள் ... ... ... ... | 1,685 | 1,822 |
| சந்தைக்கடன்பாடுகள் ... ... ... ... | 19,380 | 10,551 |
| வங்கியல்லா ... ... ... ... | 10,178 | 11,084 |
| வங்கி ... ... ... ... | 9,202 | – 533 |
| நிலுவைகளிலுள்ள அதிகரிப்பு (+)/வீழ்ச்சி (—) | — | 3,478 |

**(மொத்த உள்நாட்டு**

| விடயம் | 1988 | 1989 |
|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... ... | 21.8 | 24.0 |
| மொத்த அரசிறை ... ... ... ... | 18.8 | 21.4 |
| வரி அரசிறை ... ... ... ... | 16.2 | 18.9 |
| வரியல்லா அரசிறை ... ... ... ... | 2.6 | 2.6 |
| கொடைகள் ... ... ... ... | 3.0 | 2.5 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... ... ... | 34.5 | 32.6 |
| நடைமுறை ... ... ... ... | 20.8 | 22.6 |
| மூலதனம் ... ... ... ... | 10.3 | 8.2 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் ... | 3.4 | 1.8 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... ... ... | – 2.0 | – 1.2 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) ... ... ... ... | – 15.7 | – 11.2 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்குப் பின்) ... ... ... ... | – 12.7 | – 8.6 |
| நிதியிடல் ... ... ... ... | 12.7 | 8.6 |
| வெளிநாடு ... ... ... ... | 3.2 | 2.4 |
| உள்நாடு ... ... ... ... | 9.5 | 4.9 |
| சந்தையல்லா ... ... ... ... | 0.8 | 0.7 |
| சந்தை ... ... ... ... | 8.7 | 4.2 |
| வங்கியல்லா ... ... ... ... | 4.6 | 4.4 |
| வங்கி ... ... ... ... | 4.2 | – 0.2 |
| நிலுவைகளிலுள்ள அதிகரிப்பு (+)/வீழ்ச்சி (—) | 0.0 | 1.4 |

*அட்டவணை 1.4*

## தொழிற்பாடுகளின் தொகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில

| 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக்கப் பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக்கப் பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| 74,661 | 84,049 | 93,719 | 94,398 | 110,927 |
| 67,964 | 76,179 | 84,999 | 86,118 | 101,977 |
| 61,206 | 68,157 | 76,591 | 76,692 | 94,377 |
| 6,758 | 8,022 | 8,408 | 9,425 | 7,600 |
| 6,697 | 7,870 | 8,720 | 8,280 | 8,950 |
| 99,814 | 119,527 | 124,010 | 117,627 | 141,916 |
| 71,771 | 83,756 | 84,327 | 88,726 | 97,437 |
| 19,161 | 25,968 | 34,475 | 28,540 | 37,271 |
| 8,882 | 9,803 | 5,208 | 361 | 7,209 |
| – 3,807 | – 7,577 | 672 | – 2,608 | 4,540 |
| – 31,850 | – 43,348 | – 39,011 | – 31,509 | – 39,939 |
| – 25,153 | – 35,478 | – 30,291 | – 23,229 | – 30,989 |
| 25,153 | 35,478 | 30,290 | 23,230 | 30,989 |
| 11,644 | 19,329 | 20,793 | 7,984 | 19,489 |
| 16,986 | 16,148 | 9,497 | 15,246 | 11,500 |
| 3,538 | 1.667 | — | 1,857 | — |
| 13,448 | 14,481 | 9,497 | 13,389 | 11,500 |
| 13,190 | 14,447 | 9,497 | 15,710 | 13,000 |
| 258 | 34 | — | – 2,321 | – 1,500 |
| – 3,478 | — | — | — | — |

உற்பத்தியின் சதவீதமாக)

| | | | | |
|---|---|---|---|---|
| 23.2 | 22.6 | 21.2 | 22.3 | 22.4 |
| 21.1 | 20.4 | 19.2 | 20.3 | 20.6 |
| 19.0 | 18.3 | 17.3 | 18.1 | 19.1 |
| 2.1 | 2.2 | 1.9 | 2.2 | 1.5 |
| 2.1 | 2.1 | 2.0 | 2.0 | 1.8 |
| 31.0 | 32.1 | 28.0 | 27.8 | 28.7 |
| 22.3 | 22.5 | 19.0 | 21.0 | 19.7 |
| 6.0 | 7.0 | 7.8 | 6.7 | 7.5 |
| 2.8 | 2.6 | 1.2 | 0.1 | 1.5 |
| – 1.2 | – 2.0 | 0.2 | – 0.6 | 0.9 |
| – 9.9 | – 11.6 | – 8.8 | – 7.4 | – 8.1 |
| – 7.8 | – 9.5 | – 6.8 | – 5.5 | – 6.3 |
| 7.8 | 9.5 | 6.8 | 5.5 | 6.3 |
| 3.6 | 5.2 | 4.7 | 1.9 | 3.9 |
| 5.2 | 4.3 | 2.1 | 3.6 | 2.3 |
| 1.1 | 0.3 | — | 0.4 | 0.0 |
| 4.1 | 4.0 | 2.1 | 3.2 | 2.3 |
| 4.1 | 4.0 | 2.1 | 3.7 | 2.6 |
| 0.1 | — | — | 0.5 | – 0.3 |
| – 1.1 | — | — | — | — |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

மான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக எத்தகைய கட்டுப்பாடுகளு மின்றி வெளிநாட்டு நாணய முன்மாற்று விற்பனைக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பணிகளுக்கான கொடுப்பனவு தொடர்பாக அனைத்து வகைப் பயணங்களுக்குமான வெளிநாட்டு நாணயச் சலுகைகள் கணிசமாக அதிகரிக்கப்பட்ட வேளையில் வெளிநாடுகளில் கல்வி மற்றும் வைத்திய சிகிச்சைகளுக்கான உரித்துக்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கப்பட்டன. சொத்துக்களின் மாற்றல் தொடர்பாகக் குடிபெயர்ந்த இலங்கையர்களின் வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கின் வரவில் இருந்த நிதியங்கள் விடுவிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. மேலும் குடிபெயர்வோர் வெளிச்செல்லும் வேளையில் மூலதன மாற்றல்கள் மீதான உச்ச வரம்பு ஆளொருவருக்கு ரூ. 350,000 இலிருந்து ரூ. 500,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. இதேவேளையில் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இலங்கையின் கம்பனிகளின் வழங்கப்பட்ட மூலதனத்தில் 100 சதவீதம் வரையில் முதலீடு செய்வதற்கு வதிவற்றோருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட நாடுசார் நிதியங்களுக்கும் பிரதேச நிதியங்களுக்கும் 1992 நடுப்பகுதியிலிருந்து அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன், பொருளாதாரத்தின் பல துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்கான பலதரப்பட்ட ஊக்குவிப்புக்களையும் 1992 இல் முதலீட்டுச் சபை அறிமுகப்படுத்தியது.

1992 இல் வரவு செலவுத் திட்டச் செயலாற்றம் கணிசமான முன்னேற்றத்தினைக் குறித்துக் காட்டியதோடு பற்றாக்குறை கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்ததன் மூலம் முன்னைய ஆண்டில் நிகழ்ந்த அரசிறைத் தவறுகள் இழப்பீடு செய்யப்பட்டன. அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1991 இன் 20.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 20.3 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையின் காரணமாகப் பொதுவான அரசிறை முயற்சி சிறிது பலவீனமடைந்தபோதும் நடைமுறைக் கணக்கின் கடுமையான வீழ்ச்சியானது தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பெறுகைகள் நீங்கலான மூலதனச் செலவு குறைக்சப்பட்டமையுடன் இணைந்து மொத்தச் செலவு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினை முன்னைய ஆண்டின் 32.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 27.8 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.4 சதவீதம் கொண்ட குறைந்தளவான வரவு செலவுப் பற்றாக்குறையினை உருவாக்குவதற்குச் சாதகமாக அமைந்ததோடு 1991 இல் பதிவு செய்யப்பட்ட 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைந்த விகிதமாகவும் காணப்பட்டது. இது உறுதிப்பாட்டுடன் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார விரிவாக்கத்திக்கு அத்தியாவசியமான இறைச் சமநிலையினைப் பேணுவதற்கான முக்கிய நடவடிக்கையொன்றாகஅமைய வேண்டும் என்பதில் ஐயமில்லை.

1992 இல் ரூ. 861,180 இலட்சமாக விளங்கிய அரசின் அரசிறை 1991 இன் 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் அதிகமானதாகும். எனினும் பொதுவான அரசிறை வளர்ச்சியானது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பினைவிடக் குறைவானதாகக் காணப்பட்டதுடன் அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 1991 இன் 20.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 20.3 சதவீதத்திற்குச் சிறிதளவான வீழ்ச்சியினையும் பதிவு செய்தது. ரூ. 766,920 இலட்சமாக விளங்கிய வரி அரசிறை மொத்த அரசிறையில் 89 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே பெரும்பாலும் காணப்பட்டது. பொருட்கள், பணிகள் மீதான உள்

நாட்டு வரிகள் இவ்வாண்டில் தொடர்ந்து விரிவடைந்து 1991 இன் 47 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 51 சதவீத வரி அரசிறையினை உருவாக்கின. கலால் வரியின் கீழான உற்பத்திப் பொருட்களின் வகைகளில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பும் பாதுகாப்புத் தீர்வையொன்றின் விதிப்பும் இந்த மூலத்திலிருந்தான வருவாயினை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தன. இதேவேளையில் இறக்கு மதித் தீர்வைகள் 1992 இன் மொத்த அரசிறையில் 27 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினை உறுதிப்படுத்தும் வகையில் 1992 இல் ஏற்றுமதித் தீர்வைகளின் பங்கு மொத்த வரி அரசிறையின் 1.1 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. மாறாக மொத்த வரி அரசிறையில் வருமான வரிகளின் பங்கு 1991 இன் 14.3 சத வீதத்திலிருந்து 1992 இல் 15.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1992 இல் ரூ. 94,250 இலட்சமாக விளங்கிய வரி அல்லா அரசிறை முன்னைய ஆண்டைவிட 17 சதவீத அதிகரிப்பாகும். வட்டி வருவாய்கள் 35 சதவீதத்தினால் அதிகரித்து வரியல்லா அரசிறையில் 38 சதவீதத்திற்கு வகை கூறின. இதேபோன்று 1992 இல் ரூ. 11,500 இலட்சமாக விளங்கிய மத்திய வங்கியின் இலாப மாற்றல் ரூ. 6,500 இலட்சம் அதிகமானதாகும். இதேவேளையில் கைத்தொழில் அல்லா விற்பனைகள், நிருவாகக் கட்டணங்கள், மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டணங்கள் என்பனவற்றிலிருந்தான வரு வாய் ரூ. 25,050 இலட்சமாக விளங்கி வரியல்லா அரசிறையின் 27 சதவீதத் திற்கு வகை கூறியது.

1992 இல் ரூ. 1,176,270 இலட்சமாக விளங்கிய மொத்தச் செலவு 1991 இனைவிடச் சிறிதளவான 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது ரூ. 887,260 இலட்சம் கொண்ட (75 சதவீதம்) நடைமுறைச் செலவையும் ரூ. 289,090 இலட்சம் கொண்ட (25 சதவீதம்) மூலதனச் செலவையும் தேறிய கடன் வழங்கலையும் உள்ளடக்கியிருந்தது. 1992 இல் நடைமுறைக் கணக்கு 1991 இனைவிட 6 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தபோதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக நடைமுறைக் கணக்கு இவ்விரு ஆண்டு களுக்கிடையில் 22.5 சதவீதத்திலிருந்து 21.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந் தது. சம்பளங்கள், கூலிகள், பொருட்கள், பணிகள் என்பவற்றின் வடிவி லான பொருட்கள் பணிகள் மீதான செலவு ரூ. 391 350 இலட்சமாக விளங்கி நடைமுறைச் செலவில் பெரும் பங்கினைக் (44 சதவீதம்) கொண்டிருந்தது. 1992 இல் பொதுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 252,830 இலட்சமாக அமைந்து நடைமுறைச் செலவில் 28 சதவீதத்திற்கு வகை கூறின. வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவில் உள்நாட்டுப் படுகடன் ரூ. 205,970 இலட்சத்தினையும் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 46,260 இலட்சத்தினையும் கொண்டிருந்தன. இதேவேளையில் 1992 இல் குடியிருப்பாளர்கள், தெரிந் தெடுக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 243,080 இலட்சமாக விளங்கி 6 சதவீத வீழ்ச்சியைக் கொண் டிருந்தன. மொத்த நடைமுறைச் செலவின் விகிதமாக இது 1991 இன் 31 சத வீதத்திலிருந்து 1992 இல் 27 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமொன்றாக அத்தகைய மாற்றல்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 6.9 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

1992 இல் மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 289,010 இலட்சமாக விளங்கின. இது பொது முதலீட்டின் மீதான ரூ. 340,270 இலட்சத்தினையும் தனியார் மயப்படுத்தல் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களிலிருந்தான கடன் மீள் கொடுப்பனவுகள் என்பனவற்றிலிருந்தான பெறுகைகளின் காரணமாக அரசின் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 51,260 இலட்சம் கொண்ட குறைப்பினையும் உள்ளடக்கியிருந்தது. அரசதுறை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நியதிகளில் நிருமாணத்துக்கும் நிலையான சொத்துக்களின் அபிவிருத்திக்குமாக அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் நேரடி மூலதனச் செலவு முன்னைய ஆண்டின் ரூ. 140,720 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 158,290 இலட்சமாக விளங்கியது. மேலும் நியதிச்சபைகளுக்கும் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்களுக்குமான மூலதன மாற்றல்கள் 1991 இன் ரூ. 99,830 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 114,400 இலட்சமாக விளங்கின. இதேவேளையில் அரசின் கடன் வழங்கல் மூலம் திரட்டப்பட்ட நிதியங்களிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு ரூ. 60,070 இலட்சமாக விளங்கி வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 90,000 இலட்சத்தினை விடக் கணிசமானளவு குறைவானதாகக் காணப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட அரசிறை மற்றும் செலவுப் பாய்ச்சல்கள் 1992 இல் ரூ. 315,090 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையொன்றை விளைவித்தன. இது 1991 இன் பற்றாக்குறையைவிட ரூ. 118,400 இலட்சம் கொண்ட கடுமையான வீழ்ச்சியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாகப் பற்றாக்குறை 1991 இன் 11.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பற்றாக்குறையை நிதியிடலில் ரூ. 145,690 இலட்சம் கொண்ட தொகை வெளிநாட்டுக் கடன் பெறுகைகளினூடாகத் திரட்டப்பட்டது. எனினும், ரூ. 65,850 இலட்சம் கொண்ட கடன் மீள் கொடுப்பனவுகளை அனுமதித்தபின் 1992 இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் ரூ. 79,840 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் கிடைக்கத்தக்கதாயிருந்த தொகையின் பெரும்பாலும் அரைப் பங்காக இருந்தது. இதேவேளையில் ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிருவாக நடைமுறைகள் என்பனவற்றின் மூலமாக வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்தக் கடன் பெறுகைகள் ரூ. 356,900 இலட்சமாக விளங்கின. எனினும், ரூ. 181,230 இலட்சம் கொண்ட கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை அனுமதித்தபின் உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய கடன் பெறுகைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட ரூ. 170,150 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 175,670 இலட்சமாக விளங்கின. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் குறைப்பினதும் அதனை நிதியிடுவதற்காக வெளிநாட்டு உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களின் கணிசமான தொகையினதும் சூழலில் 1992 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக வங்கித் தொழில் முறையிலிருந்தான தேறிய கடன் பெறுகைகள் ரூ. 23,210 இலட்சத்தினைக் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக விளங்கின.

1992 இல் அரச படுகடன் ரூ. 4,048,700 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 10 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. ரூ. 1,700,200 இலட்சமாக விளங்கிய உள்நாட்டுப் படுகடன் மொத்தப் படுகடனில் 42 சதவீதத்தைக்

கொண்டிருந்த வேளையில் ரூ. 2,348,500 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் 58 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. உள்நாட்டுப் படுகடனைப் பொறுத்தவரையில் இவ்வாண்டில் நிதியங்களைத் திரட்டுவதற்காகத் திறைசேரி உண்டியல்கள் மீது அதிகூடிய அளவில் தங்கியிருந்ததைப் பிரதிபலிக்கும் வகையில் ரூ. 979,240 இலட்சமாக விளங்கிய குறுங்காலப் படுகடன் 16 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1991 இறுதியில் ரூ. 870,960 இலட்சமாக விளங்கிய திறைசேரி உண்டியல்களின் மீதான படுகடனின் வெளிநின்ற தொகை ரூ. 141,280 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இதேவேளையில் ரூ. 2,348,500 இலட்சமாக விளங்கிய வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் முன்னைய ஆண்டைவிட ரூ. 202,740 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும் ரூ. 122,890 இலட்சம் கொண்ட வெளிநாட்டுப் படுகடனினது அதிகரிப்பின் பெரிய பாகமொன்று இவ்வாண்டில் செலாவணி வீத மாறுபாடுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். இதன்படி 1992 இல் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாட்டிற்குக் காரணமான வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்பு ரூ. 79,840 இலட்சம் மட்டுமேயாகும்.

1992 இல், கடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 500,270 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 26 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாகப் பணிக் கொடுப்பனவுகள் 1991 இன் 10.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 11.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. ரூ. 247,080 இலட்சமாக விளங்கிய கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மொத்தப் படுகடன் பணிக் கடப்பாடுகளில் 49 சதவீதத்தினைக் கொண்டிருந்த வேளையில் ரூ. 253,190 இலட்சமாக விளங்கிய வட்டிக் கொடுப்பனவுகள் மிகுதியை உள்ளடக்கியிருந்தன. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் உள்நாட்டுப் படுகடன் மீதான கடப்பாடுகள் ரூ. 181,230 இலட்சமாக விளங்கியதோடு 1991 இனைவிட 40 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தன. இதேவேளையில் ரூ. 65,850 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 35 சதவீதத்தால் அதிகரித்தன. அதிகரித்த வட்டி வீதங்களையும் குறுங்காலப் படுகடன்களின் அதிகரித்த அளவினையும் பிரதிபலிக்கும் வகையில் ரூ. 113,550 இலட்சமாக விளங்கிய குறுங்காலக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. ரூ. 92,780 இலட்சமாக விளங்கிய நடுத்தர நீண்டகாலப் படுகடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 23 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதேவேளையில், 1992 இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 46,860 இலட்சமாக விளங்கி 14 சதவீதத்தினால் அதிகரித்தன.

1992 இல் நாணய விரிவாக்கத்தின் சிறிதளவு மிதமான தன்மையானது பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் வரவேற்கக்கூடிய அபிவிருத்தியொன்றாகக் காணப்பட்டது. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பண நிரம்பல் ($M_1$) முன்னைய ஆண்டின் 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 7 சதவீதத்தினால் விரிவடைந்தது. இதே போக்கினைப் பின்பற்றி ($M_1$) இனையும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வசமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கிய விரிந்த பண நிரம்பல் ($M_2$) இவ்விரு ஆண்டுகளில் 23 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நாணய விரிவாக்கத்தின் இந்த மந்த கதியானது பொருளாதாரத்தின் திரவத் தன்மைக்குத் தொடர்ந்து உந்துவிசையாக அமைந்த

## அட்டவணை 1.5

### நாணய அளவுகள் 1987—1992

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடனிலேற்பட்ட மாற்றம் ...** | **11,457** | **21,302** | **5,454** | **17,543** | **14,362** | 19,121 |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 4,502 | 9,017 | 54 | 3,078 | 2,595 | 558 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 2,627 | 3,421 | 3,075 | 1,774 | —1,559 | 673 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | —301 | 195 | —140 | 418 | 161 | 264 |
| ஏனைய தனியார் துறைக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 4,629 | 8,669 | 2,465 | 12,273 | 13,165 | 17,626 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் ...** | **111** | **—2,233** | **—2,326** | **5,474** | **7,099** | 6,453 |
| **மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் ...** | **11,568** | **19,069** | **3,128** | **23,017** | **21,461** | 25,574 |
| விரிந்த பணநிரம்பலில் ($M^2$) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 7,475 | 9,611 | 8,487 | 14,584 | 21,080 | 18,604 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 4,093 | 9,458 | —5,359 | 8,433 | 381 | 6,970 |

### நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு

| | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 17.9 | 28.2 | 5.6 | 17.1 | 12.0 | 14.2 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 15.8 | 22.4 | 3.0 | 17.7 | 16.4 | 16.9 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | 39.3 | 42.3 | 1.0 | 17.5 | 18.1 | 2.9 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் | 60.7 | 57.7 | 99.0 | 82.5 | 81.9 | 97.1 |
| விரிந்த பண நிரம்பலின் (M) சதவீத அதிகரிப்பு ... | 14.7 | 16.4 | 12.4 | 19.1 | 23.2 | 16.6 |
| குறுகிய பண நிரம்பலின் (M) சதவீத அதிகரிப்பு ... | 18.4 | 29.1 | 9.1 | 12.8 | 18.0 | 7.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் (தேறிய) கணிசமான அதிகரிப்பின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. இதன்படி 1992 இல் நாணயத் தோற்றப்பாடின் மிகச் சாதகமான அபிவிருத்தியானது மத்திய வங்கியின் வலுமிக்க திறந்த சந்தை நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்டதாகும்.

நாணய அபிவிருத்தியின் போக்கு சாதகமானதாகக் காணப்பட்டபோதிலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதன் நோக்கில் வளர்ச் மட்டங்களானவை சார்புரீதியில் இன்னமும் உயர்வானதாக விளங்கின. 1992 இல் உயர்ந்த நாணய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணிகளாக வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் அதிகரிப்பும் தனியார் துறைக்கான கொடுகடனின் விரிவாக்கமும் விளங்கின. எல்லாமாக இவ்வாண்டில் வங்கித்தொழில் முறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) 37 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தனியார்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி வீதம் 23 சதவீதமாகக் காணப்பட்டது. ஒப்பிடுகையில் 1992 இல் அரசுக்கான வங்கிக் கொடுகடன் பண நிரம்பலின் மீது மிதமானதொரு விரிவுத் தாக்கத்தினை மட்டுமே விளைவித்தது.

1992 இல் ரூ. 48,020 இலட்சமாக அல்லது 12 சதவீதமாக விளங்கிய நாணயத் தளத்தின் (அல்லது ஒதுக்குப்பணம்) விரிவாக்கமானது சார்புரீதியில் மிதமானதாகும். 1991 இன் ஒப்பிடத்தக்க விரிவாக்கமானது ரூ. 84,760 இலட்சம் அல்லது 26 சதவீதமாக இருந்தது. மூலப் பக்கத்தில் நாணயத் தளத்தின் விரிவாக்கமானது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூ. 75,630 இலட்சத்திற்குக் கணிசமாக அதிகரித்தமையின் முழுமையான காரணத்தினால் ஏற்பட்டதாகும். மாறாக, வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 27,600 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்து இவ்வாண்டில் நாணயத் தளத்தின் வளர்ச்சி வீதத்தினை மிதப்படுத்தின. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியானது வங்கியின் சிறப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். இதேவேளையில் 1992 இல் மத்திய வங்கியிலிருந்தான மீள்நிதியிடல் கடன்கள் ரூ. 4,190 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. கொடுகடனுக்கான அதிகரித்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் பணப்பெருக்கி அதாவது பண நிரம்பலுக்கும் நாணயத்தளத்துக்குமிடையிலான விகிதம் ஓராண்டுக்கு முன்னான 2.80 இலிருந்து 1992 திசெம்பரில் ஓரளவு கடுமையாக 2.91 இற்கு உயர்வடைந்தது.

அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடரும் வகையில் உள்நாட்டுக் கொடுகடனின் உயர்ந்த வளர்ச்சியும் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் திரண்டமையும் 1992 இன் நாணயக் கூட்டுக்களின் மீதான தாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாக விளங்கின. எல்லாமாக உள்நாட்டுக் கொடுகடன் 1990 இன் ரூ. 175,430 இலட்ச (17 சதவீதம்) அதிகரிப்பையும் 1991 இன் ரூ. 143,620 இலட்ச (12 சதவீதம்) அதிகரிப்பையும் தொடர்ந்து 1992 இல் ரூ. 191,210 இலட்சத்தினால் (14 சதவீதம்) அதிகரித்தது. இதேவேளையில், 1990 இலும் 1991 இலும் முறையே ரூ. 54,740 இலட்சத்தாலும் (116 சதவீதம்) ரூ. 70,990 இலட்சத்தினாலும் (70 சதவீதம்) அதிகரித்த வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1992 இல் ரூ. 64,530 இலட்சம் கொண்ட (37 சதவீதம்) மேலுமொரு அதிகரிப்பைப் பதிவு செய்தன. உள்நாட்டுக் கொடுகடன், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆகிய இரண்டினதும் தடையற்ற வளர்ச்சியானது,

தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார சீராக்கங்களினதும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக தாராளமயப்படுத்தல் நடவடிக்கைகளினதும் சூழலில் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான இயக்க விசையினைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

1992 இல் மொத்தக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதும் பெரும்பாலும் தனியார்துறை சார்ந்ததாக இருந்தது. எல்லாமாக, தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் ரூ. 185,630 இலட்சத்தினால் (20 சதவீதம்) அதிகரித்த வேளையில் வங்கித்தொழில் முறையிலிருந்து அரசுக்கான தேறிய கொடுகடன் சிறிதளவான ரூ. 5,580 இலட்சத்தினால் (1.3 சதவீதம்) அதிகரித்தது. தனியார்துறையில் வங்கிக் கொடுகடனின் ரூ. 176,260 இலட்சம் கொண்ட பெரிய பங்கொன்று ஏனைய தனியார் துறையினால் பயன்படுத்தப்பட்டது (உண்மையான தனியார்துறை). ஒப்பிடுகையில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடனின் வளர்ச்சி ரூ. 6,730 இலட்சமாகவும் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனின் வளர்ச்சி ரூ. 2,640 இலட்சமாகவும் விளங்கியது. உயர்ந்த வட்டி வீதங்களின் மத்தியிலும் தனியார்துறைக்கான கொடுகடனின் தொடர்ச்சியான உயர் வளர்ச்சியானது முதலீட்டையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதில் பொருளாதாரத்தில் தனியார் துறையின் முக்கிய பங்கினை ஊக்குவிக்கும் நோக்கிலான கொள்கையின் பின்னணியில் இத்துறைக்கான பொருளாதார வாய்ப்புக்களைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

1991 இன் ரூ. 15,590 இலட்சம் கொண்ட (10 சதவீதம்) வீழ்ச்சிக்கு மாறாக 1992 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 6,730 இலட்சத்தினால் (5 சதவீதம்) அதிகரித்தது. எனினும் வரட்சி நிலைமையின் காரணமாக நீர் மின்வலுவின் பற்றாக்குறையினை ஈடுசெய்யும் பொருட்டு வெப்ப மின்வலு உருவாக்கத்தின் மீது ஏற்பட்ட மேலதிக செலவின் காரணமாக இலங்கை மின்சபை வங்கிக் கடனில் பெருமளவில் தங்கியிருக்க வேண்டியிருந்தமையினால் 1992 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கடன் அதிகரிப்பில் அதன் கடன் பெறுகைகள் பெருமளவு தாக்கத்தினைக் கொண்டிருந்தன. எல்லாமாக, இவ்வாண்டில் இலங்கை மின்சபைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 21,450 இலட்சத்தினால் அதிகரித்தது. 1992 இல் அதிகரித்த வர்த்தக வங்கிக் கொடுகடனை நாடிய ஏனைய கூட்டுத்தாபனங்களாக மக்கள்தோட்ட அபிவிருத்திச் சபையும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் விளங்கியதுடன் இவற்றின் கொடுகடன் மட்டங்கள் முறையே, ரூ. 8,490 இலட்சத்தினாலும் ரூ. 6,480 இலட்சத்தினாலும் அதிகரித்தன. இதே வேளையில், இவ்வாண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமும் அவற்றின் வங்கிக் கடன் மட்டங்களை முறையே ரூ. 11,830 இலட்சத்திற்கும் ரூ. 7,840 இலட்சத்திற்கும் குறைத்துக் கொண்டன.

தொடர்ச்சியான அரசிறைச் சீராக்கங்களினதும் மத்திய வங்கியின் வலுவான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினதும் தாக்கத்தின்கீழ் 1992 இல் அரசின் வங்கிக்கடன் பயன்பாடு மிதமானதாக இருந்தது. 1991 இன் ரூ. 25,950 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் அரசுக்கான தேறிய கொடுகடன் ரூ. 5,580 இலட்சத்தினால் அதிகரித்தது. 1992 இல் அரசுக்கான தேறிய கொடுகடனின் விரிவாக்கமானது அரசுக்கான மத்திய வங்கிக் கொடுகடனின் ரூ. 9,840 இலட்சம் கொண்ட அதிகரிப்பினதும் வர்த்தக வங்கிகளி

லிருந்தான ரூ. 4,260 இலட்சம்கொண்ட குறைப்பினதும் இணைந்த விளைவாகும். எனினும், மத்திய வங்கியிலிருந்து அரசுக்கான கொடுகடனானது அனுமதிப் பங்கு ஒதுக்குகளின் 9 ஆவது பொது மீளாய்வின்கீழ் அனுமதிப் பங்கு ஒதுக்கில் காணப் பட்ட அதிகரிப்பின் விளைவாகப் பன்னாட்டு நிதியத்துக்கான உதவு தொகை கொடுப்பனவின் பேரிலான ரூ. 12,010 இலட்சம் கொண்ட சிறப்புக் கடன் ஒன்றையும் உள்ளடக்கியிருந்தது. அரசின் சார்பாகச் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் தொடர்பான மத்திய வங்கியின் உடமைகளிலும் கடுமையான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த விடயங்களுக்கு இடமளித்து நோக்குகை யில் 1992 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசின் வங்கிக் கடன் பயன்பாடு ரூ. 23,210 இலட்சத்தினைக் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக விளங்கியது.

தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாக 1992 இலும் வெளிநாட்டுத்துறை பணநிரம்பலில் பாரிய விரிவுத் தாக்கத்தை விளைவித்தது. 1991 இன் ரூ. 70,990 இலட்சம் கொண்ட (70 சதவீதம்) அதிகரிப்பினைத் தொடர்ந்து 1992 இல் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 64,530 இலட்சத்தினால் (37 சதவீதம்) அதிகரித்தன. தேறிய வெளிநாட்டுச் சொத்துக் களின் அதிகரிப்பு ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதிக்கே முற்றாக மட்டுப் படுத்தப்பட்டிருந்த முன்னைய ஆண்டைப் போலன்றி 1992 இல் வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது ஆண்டு முழுவதிலும் ஒரே சீராகப் பரந்து காணப்பட்டது. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட தொடர்ச்சியான பற்றாக்குறையின் மத்தியிலும் நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையினை விஞ்சும் வகையில் மூலதனக் கணக்கில் மூலவளங்கள் கிடைக்கத்தக்க தாக இருந்தமையினால் இவ்வாண்டில் வங்கித்தொழில் முறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன.

1992 இல் வர்த்தக வங்கித்தொழில் முறையின் திரவத் தன்மை திருப்தி கரமான மட்டத்தில் காணப்பட்டது. 1991 இல் ரூ. 85,630 இலட்சத்தினால் உயர்வடைந்த வர்த்தக வங்கிகளின் மொத்தத் திரவச் சொத்துக்கள் 1992 இல் ரூ. 47,490 இலட்சம் கொண்ட மேலதிக அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதே வேளையில் இவ்வாண்டில் கேள்வி வைப்புக்கள் ரூ. 17,810 இலட்சத் தினால் மிதமாக அதிகரித்தன. இதன்படி கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1991 இன் 160 சதவீதத்திலிருந்து 1992 இல் 167 சத வீதத்திற்கு மேலும் அதிகரித்து வர்த்தக வங்கிகளின் மேம்பட்ட திரவ நிலையினை எடுத்துரைத்தது. எனினும், மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1991 இன் 43 சதவீதத்திலிருந்து 1992 இல் 40 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்து வர்த்தக வங்கித்தொழில் முறையின் அதிகரித்த வைப்புத் தளத்தைப் பிரதிபலித்தது.

அதிகரித்த திரவத் தன்மையின் பின்னணியில் 1992 இல் வங்கிகளுக்கிடையி லான அழைப்புப் பணச் சந்தை நடவடிக்கைகள் சுருக்கமொன்றைக் காட்டின. இவற்றின் புரள்வு முன்னைய ஆண்டின் ரூ. 95,490 இலட்சம் கொண்ட (4 சதவீதம்) அதிகரிப்புக்கு மாறாக ரூ. 176,950 இலட்சத்தினால் (8 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. எனினும், 1992 செத்தெம்பரில் வர்த்தக வங்கிகளின் வெளி நாட்டு நாணய வைப்புக்களை உள்ளடக்கும் வகையில் ஒதுக்குத் தேவைகள் விரிவாக்கப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகள் மீண்டும் மட்டுப்படுத்தப் பட்ட திரவத் தன்மையைக் கொண்டதாக மாறியமையால் அழைப்புப் பண

வீதங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தின. இதன்படி, குறுகிய அழைப்புப் பண வீதங்கள் 1991 இறுதியின் 13–27 சதவீத வீச்சிலிருந்து 1992 ஒகத்தில் 15–19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் இறுதியில் மீண்டும் ஆண்டிற்கு 10–32 சதவீத வீச்சிற்கு விரிவடைந்தன.

நாட்டின் வங்கிக் கிளை வலையமைப்பின் விரிவாக்கமானது 1992 இல் மேலும் இயக்கவிசையினைக் கொண்டிருந்தது. 1990 இலும் 1991 இலும் முறையே 49 மற்றும் 50 கிளைகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து 1992 இல் ஏற்பட்ட மேலும் 83 கிளைகள் திறக்கப்பட்டதோடு நாட்டின் வங்கித்தொழிலின் செறிவு கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டது. பின்னையது வர்த்தக வங்கிகளினால் நிறுவப்பட்ட 48 கிளைகளையும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் 32 கிளைகளையும், தேசிய சேமிப்பு வங்கியின் 3 கிளைகளையும் உள்ளடக்கியிருந்தது. கடந்த அண்மைக் காலங்களின் அமைப்பு முறையினைப் பின்பற்றி நாட்டின் வங்கிக் கிளை வலையமைப்பின் விரிவாக்கத்தில் மீண்டும் உள்நாட்டுத் தனியார் வர்த்தக வங்கிகளே ஆதிக்கத்தைக் கொண்டிருந்தன. 1992 இல் உள்நாட்டுத் தனியார் வர்த்தக வங்கிகளினால் எல்லாமாக 31 புதிய கிளைகள் திறக்கப்பட்டன. இவை வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் 15 கிளைகளையும், வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியினால் திறக்கப்பட்ட 7 கிளைகளையும், வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியின் 6 கிளைகளையும், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் 3 கிளைகளையும் உள்ளடக்கியிருந்தன. இதே வேளையில், இலங்கை வங்கி 5 புதிய வங்கிக் கிளைகளைத் திறந்தவேளையில் மக்கள் வங்கியும் 5 கிளைகளைத் திறந்தது. 1992 இல் வங்கிக் கிளை விரிவாக்கத்தின் குறிப்பிடத்தக்க பண்பு என்னவெனில் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளின் கிளை வலையமைப்பின் விரிவாக்கமாகும். இந்த வங்கிகள் எல்லாமாக 7 கிளைகளைத் திறந்ததோடு இவை வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கிக் கூட்டுத்தாபனத்தின் 3 கிளைகளையும் ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் 2 கிளைகளையும் ஏ.என்.இசட் கிரின்லேஸ் வங்கியினதும், பப்ளிக் பேங்க் பர்ஹாட் இனதும் ஒவ்வொரு கிளையினையும் உள்ளடக்கியிருந்தன. எனவே 1992 இல் வங்கிக் கிளை வலையமைப்பின் அபிவிருத்திகளானவை நாட்டின் வர்த்தக வங்கித்தொழில் முறையின் அரசதுறை வங்கிகளின் ஆதிக்க நிலைமையினை மேலும் குறைப்பதற்கு ஏதுவாகக் காணப்பட்டன. இலங்கையின் பொருளாதார வாய்ப்புக்களில் பன்னாட்டு வங்கித்தொழில்சமூகம் வைத்திருக்கும் அதிகரித்த நம்பிக்கையினையும் வங்கித்தொழிலில் கடும் போட்டியினை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அழுத்தத்தையும் இது பிரதிபலிப்பதாக இருந்தது.

1992 இல் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 54,190 இலட்சம் கொண்ட (6 சதவீதம்) மிதமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. 1990 இலும் 1991 இலும் ஒப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் முறையே ரூ. 146,920 இலட்சமும் (23 சதவீதம்), ரூ. 183,730 இலட்சமுமாகும் (24 சதவீதம்),சொத்துக்கள் பக்கத்தில் அதிகரிப்பானது வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களிலேயே முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டதோடு இது இவ்வாண்டில் ரூ. 114,330 இலட்சத்தினால் (40 சதவீதம்) உயர்வடைந்தது. இது மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (மொத்தம்) கணிசமான அதிகரிப்பைக் காட்டிய தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாக விளங்கியதோடு 1990 இனதும் 1991 இனதும் அதிகரிப்புக்கள் முறையே ரூ. 64,360 இலட்சமாகவும் (65 சதவீதம்) ரூ. 125,570 இலட்சமாகவும் (77 சதவீதம்) விளங்கின. இதே வேளையில்

மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 1990 இன் ரூ. 82,560 இலட்சமும் (16 சதவீதம்) 1991 இன் ரூ. 58,160 இலட்சமும் (10 சதவீதம்) கொண்ட அதிகரிப்புக்களுக்கு மாறாக இவ்வாண்டில் ரூ. 60,140 இலட்சத்தினால் (9 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. அரச மற்றும் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகளின் உடைமைகளில் காணப்பட்ட ரூ. 80,620 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும் ஏனைய சொத்துக்கள் மற்றும் கணக்குகளில்காணப்பட்ட ரூ. 10,560 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும் உள்நாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளாக விளங்கின. அரச மற்றும் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகளின் உடைமையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது முழுமையாகவே வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினால் ஏற்பட்டதாகும். அரசுக்கான கடன்களும் முற்பணங்களும் ரூ. 26,850 இலட்சத்தினால் அதிகரித்தபோதிலும் இதில் கணிசமான பாகமொன்று இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு ஒதுக்கீட்டின் அதிகரிப்பிலிருந்து தோன்றிய கடப்பாடுகளை எதிர் கொள்வதற்கான சிறப்புக் கடன் ஒன்றின் மீதானதாக இருந்தது. இதே வேளையில், வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான கடன்களும் முற்பணங்களும் இவ்வாண்டில் நிதிக்கூட்டு நிலையங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கொடுகடன்களின் காரணமாக ரூ. 4,190 இலட்சத்தினால் அதிகரித்தன. மாறாக, 1991 இல் இக்கடன்கள் ரூ. 19,860 இலட்சத்தினால் (27 சதவீதம்) வீழ்ச்சியடைந்திருந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில் 1992 இல் மத்திய வங்கியின் உள்நாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 15,480 இலட்சத்தினால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 38,710 இலட்சத்தினால் அதிகரித்தன. உள்நாட்டுப் பொறுப்புக்களின் விரிவாக்கமானது ரூ. 29,740 இலட்சத்தினால் அதிகரித்த நாணயச் சுற்றோட்டத்தில் பெருமளவு பிரதிபலித்தது. 1992 செத்தெம்பரில் ஒதுக்கலைப் பேணும் நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உள்ளடக்கப்பட்டதனைத் தொடர்ந்து வைப்புப் பொறுப்புக்கள் அதிகரித்தமையால் வங்கியின் உள்நாட்டுப் பொறுப்புக்களும் மேலும் அதிகரித்தன. இதே வேளையில் முன்னைய ஆண்டில் ஓரளவு கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்த அரசின் வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 63,620 இலட்சத்தினால் (11 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 38,710 இலட்சத்தினால் மேலும் அதிகரித்தமையில் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டது.

தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 1992 இல் குறுங்கால வட்டி வீதங்களின் பொது மட்டம் உயர்வானதாக இருந்தது. திறந்த சந்தை நடவடிக்கைகளின் ஊடாக வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒன்றுதிரண்டமையிலிருந்து எழுந்த மேலதிகத் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளின் காரணமாக குறிப்பாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் திறைசேரி உண்டியல்களின் சந்தை வட்டி வீதங்கள் மேல் நோக்கி நகர்ந்தன. இதன்படி 3 மாத முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு 1991 இறுதியில் ஆண்டொன்றுக்கு 16.33 சதவீதத்திலிருந்து 1992 ஒற்றோபரில் ஆண்டொன்றுக்கு 18.33 சதவீதத்திற்கு அதிகரித்தபின் ஆண்டின் இறுதியில் ஆண்டொன்றுக்கு 17.70 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, 6 மாதங்கள், 12 மாதங்கள் மீதான வருவாய்களும் 1991 இறுதியின் ஆண்டொன்றுக்கு 16.38—17.43 சதவீத வீச்சிலிருந்து 1992 இறுதியில் 18.05—

19.00 சதவீதம் வரையிலான வீச்சுக்கு அதிகரித்தன. இந்த அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில் திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தர சந்தையின் கழிவு வீதங்களும் இவ்வாண்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இதே வேளையில் அழைப்புப்பணச் சந்தையின் வட்டி வீதங்களும் சந்தையின் குறுங்கால திரவத் தன்மை நிலைமைகளின் மாற்றங்களுடன் ஒத்துச் செல்லும் வகையில் தொடர்ந்து தளம்பலுற்றன. எனவே 1991 இறுதியில் ஆண்டொன்றுக்கு 13–27 சதவீத வீச்சில் மாறுபட்ட அழைப்புப்பண வீதங்களும் 1992 இன் இறுதியில் ஆண்டொன்றுக்கு 10–32 சதவீத விரிவான வீச்சினைப் பதிவு செய்தன. திறைசேரி உண்டியல்கள் சந்தையின் போக்குகளுக்கு ஒத்துச் செல்லும் வகையில் குறுகியகால முதிர்ச்சியைக் கொண்ட நிலையான வைப்புக்களின் மீதான வட்டி வீதங்களும் உயர்வாகக் காணப்பட்டன. வர்த்தக வங்கிகளில் 3 மாத, 6 மாத கால வைப்புக்களின் ஆகக்கூடிய வட்டி வீதங்கள் 1991 இறுதியின் முறையே 18.5 சதவீதத்துடனும் 19 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 18.5 சதவீதமாக ஒரே வீதத்தில் காணப்பட்டன. 12 மாதங்களுக்கான வைப்புக்களின் ஆகக்கூடிய வீதம் 20 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது. இதே நேரத்தில் 12–24 மாத முதிர்ச்சியைக் கொண்ட வைப்புக்களின் மீதான ஆகக்கூடிய வீதங்கள் ஆண்டொன்றுக்கு 20–21 சதவீத வீச்சில் உயர்வானதாகவே இருந்தன. இதே வேளையில் தேசிய சேமிப்பு வங்கி அதனது வைப்பு வீதங்களை முன்னைய ஆண்டின் மட்டங்களில் பேணியது. எனவே 12 மாதகால மற்றும் 24 மாத கால நிலையான வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வீதங்கள் முறையே 17 சதவீதமாகவும் 18.5 சதவீதமாகவும் மாறாது காணப்பட்டவேளையில் சேமிப்பு வைப்புக்களின்மீது வழங்கப்பட்ட வீதமும் 14 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது. வட்டி வீத அமைப்புக்களின் திரிபுகளைக் குறைக்கும் நோக்கில் குறுகிய கால மற்றும் நடுத்தரகால நீண்டகால வசதிகளுக்குப் பிரயோகிக்கப்படும் மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வீதங்களும் பொருளாதாரத்தின் பொதுவான வட்டி வீத அமைப்பின் போக்கினைப் பிரதிபலிக்கும் விதத்தில் சந்தை வீதங்களின் அசைவுகளுடன் ஒத்துச் செல்லும் வகையில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

குறுகியகால வட்டி வீதங்களின் தாக்கத்தின் கீழ் இவ்வாண்டில் நடுத்தரகால நீண்டகால வீதங்களும் உயர்வாகவே இருந்தன. எனவே வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கும் வீதம் 1991 இறுதியின் ஆண்டொன்றுக்கு 19.6 சதவீதத்திலிருந்து 1992 இறுதியில் ஆண்டொன்றுக்கு 20.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதே வேளையில் 2 ஆண்டு, 4 ஆண்டு முதிர்ச்சியினைக் கொண்ட அரச பிணைகள் முறையே ஆண்டொன்றுக்கு 17 சதவீத, 15 சதவீத வட்டி வீதங்களைக் கொண்டிருந்தமையினால் நீண்டகால வீதங்கள் தொடர்ந்தும் உயர்வானதாக இருந்தன. முன்னைய ஆண்டைப் போலவே 1992 இலும் அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் கடன் வழங்கும் வீதங்கள் உயர்வானதாக இருந்தன. எனவே அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கும் வீதங்கள் ஆண்டொன்றுக்கு 17.5 சதவீதத்திலிருந்து 23.5 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டவேளையில் தேசிய அபிவிருத்தி வங்கியின் வீதங்கள் ஆண்டொன்றுக்கு 19–21 சதவீத வீச்சில் காணப்பட்டன. 1991 திசெம்பரிலிருந்து அதனது வீதங்களை ஆண்டொன்றுக்கு 20.5 சதவீதத்தில் ஒரு சீராக்கிய அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1992 இல் தொடர்ந்தும் அதே வீதங்களையே அறவிட்டது.

நாணயக் கூட்டுக்களின் தொடர்ச்சியான உயர் வளர்ச்சியினதும் அதனோடு உடன் செல்லும் பண வீக்கத் தாக்கங்களினதும் சூழலில் 1989 இல் ஆரம்பிக்கப் பட்ட கடுமையான நாணயக் கொள்கை வழிமுறையினை அதனது பயனுறும் தன்மையினை மேம்படுத்துவதற்காகத் திருத்தங்களுடனும் நியாயப்படுத்தல்களு டனும் 1992 இலும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு மத்திய வங்கி கடமைப் பட்டிருந்தது. எனினும், கடந்த காலங்களைப் போலன்றி நாணய முகாமைத்து வத்தில் சந்தைசார் மறைமுகக் கொள்கைக் கருவிகளையே வங்கி முழுமையாக நம்பியிருந்தது. இதன்படி, 1992 இல் கொள்கையின் முக்கிய அழுத்தம் திறந்த சந்தை நடவடிக்கைகளிலும் நியதி ஒதுக்கு வீதத்திலுமே காணப்பட்டது. இதே வேளையில் 1989 இலிருந்து காணப்பட்ட நேரடிக் கொடுகடன் கட்டுப்பாட்டு வழி முறைகள் ஒழிக்கப்பட்டன. இதன்படி, தெரிந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய மற்ற விடயங்களின் இறக்குமதிகள் தொடர்பான நாணயக் கடிதங்கள் மீதான 100 சதவீத வைப்பு வரையறை 1992 ஒகத்தில் புறக்கீடு செய்யப்பட்டவேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமையற்ற துறைக்கான வர்த்தக வங்கிக் கொடு கடனின் உச்ச வரம்பும் அகற்றப்பட்டது.

முன்னர் குறிப்பிட்டதுபோலவே 1992 இல் நாணயக் கொள்கை யின் முக்கிய அழுத்தம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீதான தாகவே இருந்தது. அரசின் காசுத்தேவைப்பாடுகள், மீள்நிதியிடல் கொடு கடனின் மட்டம், வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றங்கள் மற்றும் நாணயத் தளத்தின் ஏனைய கூறுகளின் அபிவிருத்திகள் என்பவற்றைக் கருத் திற் கொண்டு மேலதிகத் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களின்மீது தனது திறந்த சந்தை நடவடிக்கைகளை மேற் கொண்டது. அதனது ஒதுக்கு இலக்குகளைப் பேணுவதற்காக வேண்டிப் பொது மக்களுக்குத் திறைசேரி உண்டியல்களை விற்பதற்காக வங்கி முதலாந்தர மற்றும் இரண்டாந்தர இருவகைச் சந்தைகளையும் பயன்படுத்தியது. இது பொருளா தாரத்தின் திரவத் தன்மைக்கு இணங்கத் திறைசேரி உண்டியல்களின் வருவாய் களில் அசைவினை விளைவித்தது.

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் சந்தையினை வலுப்படுத்துவதற் காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவதாகத் திறைசேரி உண்டியல்களுக்கான சந்தை வசதிகளை விரிவுபடுத்துவதற்காகவும் இரண்டாந் தரச் சந்தை நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காகவும் 1992 யூனில் வர்த்தக வங்கிகளையும் தெரிந்தெடுக்கப்பட்ட நிதி நிறுவனங்களையும் உள்ளடக்கிய முத லாந்தர வணிகர்கள் நியமிக்கப்பட்டனர். இரண்டாவதாக முதிர்ச்சிகளின் விரி வான தோற்றப்பாடொன்றினை வழங்குவதற்கான நோக்கில் இவ்வாண்டில் நீண்ட முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப் பட்டன. மூன்றாவதாக, முதலாந்தரச் சந்தை பற்றிப் பொது மக்களுக்குத் தேவையான தகவலை வழங்கும் நோக்குடன் ஒவ்வொரு ஏலத்திலும் முதிர்ச்சி யடையும் தொகை, பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை என்பன விளம்பரங்களின் மூலம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டன. நான்காவதாக, முதலீட்டு முறையொன்றாக இரண்டாந்தர திறைசேரி உண்டியல் களின் கவர்ச்சித் தன்மையினை மேம்படுத்தும் நோக்கில் கழிவு வீதங்களுக்கும் மீள் கழிவு வீதங்களுக்கும் இடையிலான இடைவெளி 2 சதவீதப் புள்ளிகளிலிருந்து ஒரு சதவீதப் புள்ளிக்குக் குறைக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் திறைசேரி உண்டியல்கள் சந்தையில் வங்கியல்லாத்துறையின் பங்கேற்பில் கணிசமான அதிகரிப்பொன்றினை விளை வித்தன. இதன்படி வங்கியல்லாத்துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள்

இவ்வாண்டில் ரூ. 184,960 இலட்சத்தினால் ரூ. 436,180 இலட்சத்திற்கு அதிகரித்து, வங்கியல்லாத்துறையின் திறைசேரி உண்டியல்கள் உடைமைகளின் பங்கினை 1991 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகையின் 38 சதவீதத்தி லிருந்து 1992 இன் இறுதியில் 57 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது. இதற்கு நேரிணையாக ரூ. 141,280 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்களின் மத்தியிலும் மத்திய வங்கியின் உடைமைகள் 1991 இறுதி யின் ரூ. 298,540 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 217,950 இலட்சத் திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் இது ரூ. 80,590 இலட்சம் கொண்ட அல்லது 27 சதவீத வீழ்ச்சியாகவும் காணப்பட்டது. சதவீதப் பங்கின் நியதிகளில் மத்திய வங்கியின் உடைமைகள் 1991 இறுதியின் 46 சதவீதத்திலிருந்து 1992 இறுதியில் 29 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

இன்னுமொரு முக்கிய நாணயக் கொள்கைக் கருவியாகிய நியதி ஒதுக்கு விகிதம் இவ்வாண்டில் மேலும் நியாயப்படுத்தப்பட்டு உறுதியாக்கப்பட்டது. இதன்படி 1992 சனவரியிலிருந்து பயனுறும் வகையில் ஒதுக்குத் தேவைப்பாட்டின் நோக்கத்திற்காக மொத்த வைப்புப் பொறுப்புக்களின் 2 சதவீதத்திற்குக் கூடுத லான (ஆனால் 4 சதவீதத்தை விஞ்சாத) தொகையொன்றினை வர்த்தக வங்கிகளின் காப்பறைப் பண உடைமைகளின் வடிவில் பேணுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இச்சலுகையானது வங்கிகள் அவற்றினது கிளை வலையமைப்பு மற்றும் சிறப்புப் பொதுக் கடப்பாடுகள் என்பனவற்றிற்காகக் காசுப் பைகளை அதிகளவில் காவிச் செல்வதைக் குறைக்கும் நோக்கில் வழங்கப்பட்டதொன் றாகும். எனினும் கொடுகடன் விரிவாக்கத்தின் மீதான இச்சலுகையின் விரிவுத் தாக்கத்தைச் சமநிலைப்படுத்துவதற்காக ஒதுக்கு விகிதம் 1 சதவீதப் புள்ளி யினால் 14 சதவீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. இதேவேளையில், அண்மைய ஆண்டுகளில் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உறுதியாக அதிகரித்து வரும் சூழலில் ஒதுக்குத் தேவைப்பாட்டிலிருந்து வர்த்தக வங்கிகளின் வெளி நாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் நீக்கப்பட்டமையானது நாணயக் கொள்கை கருவியொன்றாக நியதி ஒதுக்கு விகிதத்தின் பயனுறும் தன்மையினை நலிவுறச் செய்வதாக அவதானிக்கப்பட்டது. இதன்படி, 1992 செத்தெம்பர் 4 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் வெளிநாட்டு நாணய வைப்புக்களையும் உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் அனைத்து வைப்புப் பொறுப்புக்களையும் உள்ளடக்கும் வகையில் ஒதுக்குத் தேவைப்பாடு விரிவாக்கப்பட்டது. இதே நேரத் தில், விரிவாக்கப்பட்ட ஒதுக்குத் தளத்தின் தாக்கத்தினை மென்மைப்படுத்து வதற்காக நியதி ஒதுக்கு விகிதம் 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் திரவத் தன்மை உருவாக்கத்தின் முக்கிய மூலமாக விளங்கிய மீள் நிதியிடல் கொடுகடனை மேலும் நியாயப்படுத்தி அவற்றினைக் குறைப்பதற்கான முயற்சிகளை 1992 இல் மத்திய வங்கி மேற்கொண்டது. குறுகியகால மீள் நிதியிடலில் கடுமையான வெட்டுக்கள், நடுத்தரகால நீண்ட காலக் கொடுகடன் நிதியத்தின் இடைநிறுத்தம், சந்தை வீதங்களுக்கு அண்மிய தாக அவற்றினைக் கொண்டு வருவதற்காகப் பெரும்பாலான மீள் நிதியிடல் வசதிகளின் மீதான வட்டி வீதங்களைப் படிப்படியாக அதிகரித்து அதன் மூலம் நாட்டின் வட்டி வீத அமைப்பில் காணப்படும் திரிபுகளைக் குறைக்கச் செய்தல் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. எனினும் இடருக்குள்ளான நிதிக் கூட்டு நிலையங்களிலிருந்தான கோரிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டிய கடப் பாடு மத்திய வங்கிக்குக் காணப்பட்டமையால் பொதுவான மீள் நிதியிடலின்

வெளிநின்ற மட்டம் இவ்வாண்டில் ரூ. 4,190 இலட்சம் கொண்ட (8 சதவீதம்) மிதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1992 இல் நிதிக்கூட்டு நிலையங்களின் பேரிலான மீள் நிதியிடல் கொடுகடனின் அதிகரிப்பு ரூ. 9,460 இலட்சமாகும்.

வட்டி வீதக் கொள்கை கடுமையான தாக்கத்தின் கீழ் வருவதையும் பன்னாட்டு அரங்கிலும் உள்நாட்டுத் தோற்றப்பாட்டிலும் பொருளாதார முகாமைத்துவத்தில் அது சர்ச்சைக்குரிய விடயமாக மாறுவதையும் 1992 ஆம் ஆண்டு கண்டது. பன்னாட்டு அரங்கில் சில நாடுகள் தொடர்ச்சியான பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக இயக்கமின்றிய நிலையிலுள்ள தமது பொருளாதாரங்களை மீள் நிலைக்குக் கொண்டுவரும் நோக்கில் தரம் குறைந்த பணக் கொள்கைகளைத் தொடர்ந்து மேற் கொண்டன. இன்னும் சில நாடுகளில் வணிக வீழ்ச்சிகளினதும் தொழில்வாய்ப்பின்மையினதும் நியதிகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திய பொருளாதார நடவடிக்கைகளின் கடுமையான வீழ்ச்சியினைத் தொடர்ந்து பொருளாதார மீட்சியை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சியாக வட்டி வீதங்களில் கடுமையான வெட்டுக்கள் அவதானிக்கப்பட்டன. இது செலாவணி வீதங்களின் கடுமையான கீழ்நோக்கிய தாக்கத்தின் பின்னணிக்கு எதிரானதாகக் காணப்பட்டது. எனவே, உள்நாட்டு நாணய மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உதவும் கருவியொன்றாக வட்டி வீதக்கொள்கை கைவிடப்பட வேண்டுமென்பதை இது எடுத்துரைப்பதாக இருந்தது. இதேவேளையில், இன்னும் சில நாடுகளில் பணவீக்கத்திற்கெதிரான வழிமுறையொன்றாக உயர் வட்டி வீதக் கொள்கைகள் அதிகாரிகளினால் தொடர்ந்தும் பின்பற்றப்படுகையில் கொள்கை வழிமுறையானது முற்றிலும் எதிர்மாறானதாகக் காணப்பட்டது. இது வளர்ச்சி மற்றும் தொழில் நிலையில் கடுமையான பாதகமான சிக்கல்களைக் கொண்டிருந்ததோடு உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பொதுக் கருத்துக்கு மிகவும் மாறானதாகவும் இருந்ததென்பதில் ஐயமில்லை. எனவே 1992 இல் வட்டிவீத விடயத்தில் பன்னாட்டு தோற்றப்பாட்டிலிருந்து உருவான சைகைகள் முரண்பட்டவையாகக் காணப்பட்டதுடன் தெளிவான வழிகாட்டல்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் வழிகாட்டலின் மாற்றங்கள் மிகவும் குழப்பமானவையாகக் காணப்பட்டதுடன், பொருளாதார முகாமைத்துவத்தில் கொள்கை வழிமுறையொன்றாக வட்டி வீதத்தைப் பயன்படுத்தும் மரபுவழி அறிவு நுட்பத்தைக் கேள்விக் குறியாக்கியது.

உள்நாட்டு அரங்கில் நாணய விரிவாக்கத்தின் தொடர்ச்சியான உயர்ந்த வீதங்களினதும் உயர்வான பணவீக்கத்தின் நிலையான தாக்கத்தினதும் பின்னணியில் உயர் வட்டி வீதக் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினை அதிகாரிகள் கொண்டிருந்தனர். இது வட்டி வீதத்தின் அமைப்பு முழுவதனையும் மிக உயர்வானதாக வைத்திருந்ததுடன் நீண்டகாலப் பகுதியொன்றுக்கு உயர் வட்டி வீதக் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொள்ளுவது அறிவு பூர்வமானதா என்ற கேள்வியையும் தோற்றுவித்தது. பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் உயர் வட்டி வீதக் கொள்கையானது முதலீடு, வளர்ச்சி மற்றும் தொழில் நிலை என்பனவற்றிற்குத் தடையானது எனவும் அதனால் தீர்க்கப்படும் எனக் கருதப்பட்ட அதே பிரச்சனைகளை அது மேலும் தீவிரமாக்கும் எனவும் சிலர் கருத்துத் தெரிவித்தனர். ஏனைய நாடுகளில் நிலவும் வட்டி வீதங்களுடன் தொடர்புபடுத்துகையில் உள்நாட்டு வட்டி வீதங்கள் அதி உயர்வானவை எனவும் அதன் மூலம் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையினை தேய்வடையச் செய்யும் எனவும் சிலர் வாதாடினர். பணவீக்க வீதம் குறைவடைகின்றமைக்கான

அறிகுறிகள் காணப்படுகின்றன எனவும் உயர் வட்டி வீதக் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொள்ளல் இனிமேலும் தேவைப்படாது எனவும் இன்னும் சிலர் கருத்து வெளியிட்டனர். இத்தகைய பின்னணியில் நடைமுறை வட்டி வீதக் கொள்கையினை நியாயப்படுத்தலை விளக்குவது சிலவேளை பொருத்தமானதாக அமையும்.

பொதுவாக வட்டி வீதக் கொள்கையானது உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுச் சமநிலையை எய்துவதற்கும் பொருளாதாரத்தின் மூலவளங்களின் திற மையான ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்துவதற்குமான கேள்வி முகாமைத்துவ வழிமுறையொன்றாக முக்கிய பங்கினை வகிக்கின்றது. வட்டி வீதங்களின் மட்ட மும் அமைப்பு முறையும் ஒதுக்குப்பண வளர்ச்சியின்மீது கட்டுப்பாட்டைப் பேணு வதில் மத்திய வங்கியின் ஆற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்தி அதன் மூலம் நாணய விரிவாக்க வீதத்திலும் சென்மதி நிலுவை அபிவிருத்திகளிலும் தாக்கத்தை விளைவிக்கின்றது. எனவே பொருளாதாரமொன்றின் ஏனைய பேரண்டப் பொரு ளாதார நிலைமைகளில் வட்டி வீதங்கள் பொருத்தமான மட்டங்களில் பேணப் பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக் கூடியதும் வலுவுடையதுமான பொரு ளாதார விரிவாக்கத்தை எய்துவதற்கு நியாயமான அளவிலான நாணய உறுதிப் பாடு ஒரு முற்தேவையெனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறின் விலை உறுதிப்பாட்டை எய்துவதன் மூலமும் அதனைப் பேணுவதன் மூலமும் நாணயக் கொள்கையானது பொருளாதார அபிவிருத்திக்குச் சிறப்பாகப் பங்களிப்புச் செய்யலாம் என்பது பொதுவான எண்ணக் கருத்தாகும். 1992 இன் பெரும்பாலான பகுதியில் இலங்கையின் நாணய விரிவாக்கத்தின் ஆண்டு வீதம் 20 சதவீதத்தினை விஞ்சிய மட்டங்களில் காணப்பட்டது. இதே வேளையில் பணவீக்க வீதமும் 1991 இல் நிலவிய மட்டங்களுக்குப் பெரும்பாலும் நெருங்கிய மட்டங்களில் உயர்வானதாகவே இருந்தது. பணநிரம்பலின் அதிகூடிய வளர்ச்சி க்கு வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. எல்லாமாக, நாட்டின் தேறிய வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் 1992 இல் ரூ. 64,530 இலட்சத்தினால் உயர்வடைந்ததுடன் ஆண்டின் தொடக் கத்தில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்புக்களை அதிகளவில் விஞ்சுவதாகவும் இருந் தது. வெளிநாட்டுச் சொத்துக்களினால் அவ்வாறு உருவாக்கப்பட்ட மேலதிகத் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மத்திய வங்கி கடுமையான நாணயக் கொள்கையொன்றினைப் பின்பற்ற வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருந்த தோடு அதனது முக்கிய திட்டமாக உயர் வட்டி வீதக் கொள்கை விளங்கியது. திரவத் தன்மையின் மிகை நீக்கப்பட்டமையானது மத்திய வங்கியின் சொத்துப் பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களை அகற்றுவதற்கு வசதி செய்து கொடுப் பதற்காகத் திறைசேரி உண்டியல்களின் வட்டி வீதங்கள் உயர்வாக இருக்க வேண்டிய அத்தியாவசிய நிலைமையினை ஏற்படுத்தியது. இது வட்டி வீதத்தின் முழு அமைப்பினையும் உயர்வாக வைத்திருப்பதற்குக் காரணமாகியது. எனவே, பணநிரம்பலின் அதிகரிப்பு வீதத்தைக் குறைப்பதற்கும் விலை உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கும் 1992 இல் வட்டி வீதங்கள் உயர்வானதாக இருக்க வேண்டியிருந்தது. உயர் மட்டங்களில் வட்டி வீதங்களைப் பேணத் தவறியிருப்பின் திறந்த சந்தை நடவடிக்கையில் சிறிதளவு பெறுபேறுகள் மட்டுமே கிடைத்திருக்கக் கூடும். எனவே நாணய உறுதிப்பாட்டிலும் விலை மட்டத்திலும் சிக்கல்களை விளைவிக்கும் வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத்தின் ஊடாகப் பொரு ளாதாரத்தினுள் பாய்ச்சப்பட்ட மிகையான திரவத் தன்மையினையும் கட்டுப் படுத்த இயலாதிருக்கும்.

மேலும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்காக உள்நாட்டுச் சந்தையில் அரசு இன்னமும் தொடர்ந்து கணிசமான அளவு நிதியங்களைக் கடனாகப் பெறுகின்றது. அரசின் கடன் பெறுகை நிகழ்ச்சித் திட்டத்தில் மிக அண்மைய ஆண்டுகளில் வரலாற்று ரீதியில் சந்தை வீதங்களுக்குக் குறைவான வீதங்களில் வழங்கப்படும் அரச பிணைகளுக்கு எதிரான சந்தை வட்டி வீதங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின்மீது பெருமளவில் நம்பிக்கை வைத்திருக்கப்பட்டது. 1992 இல் எல்லாமாக ரூ. 141,280 இலட்சம் பெறுமதி யுடைய புதிய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டதோடு இவை மத்திய வங்கியல்லா மூலங்களுக்குச் சந்தைப்படுத்தப்பட வேண்டியிருந்தன. மத்திய வங்கி யல்லா மூலங்களுக்கு அத்தகைய பாரிய அளவிலான திறைசேரி உண்டியல்களின் விற்பனையானது வருவாய்கள் கவர்ச்சிகரமான மட்டங்களில் பேணப்பட வேண்டு மென்பதை அத்தியாவசியத் தேவையாக்கியது. எனவே, வட்டி வீதங்களின் பொருத்தமான மட்டத்திற்கும் அமைப்பு முறைக்கும் நாடு நகருவதற்கு முன்னர் தனியார் துறையின் முதலீட்டினைப் பாதிக்காத வகையில் அதற்குப் போட்டி யாகச் சந்தையிலிருந்து நேரடியாகக் கடன் பெறுவதற்கு அனுமதிக்கக்கூடிய மட்ட மொன்றுக்கு அரசு அதன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மேலும் குறைக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

மேலும், மிக அண்மிய ஆண்டுகளில் மத்திய வங்கியானது முன்னுரிமை யல்லாத் துறைகளுக்கான கொடுகடன் கட்டுப்பாடுகள் மற்றும் நாணயக் கடிதங் களுக்கு எதிரான வைப்பு வரையறைகள் போன்ற நாணயக் கொள்கை முகாமைத் துவத்தைப் பொறுத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு முறைகளிலிருந்துவிலகிச் சென்றுள்ளது. இதன்படி வங்கியானது நாணய முகாமைத் துவத்தில் நியதி ஒதுக்கு விகிதம் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்ற மறைமுகக் கட்டுப்பாடுகளிலேயே முக்கியமாகத் தங்கியிருந்தது. இது நாணய முகாமைத்துவக் கருவியொன்றான வட்டி வீதங்களின்மீது பெரும் சுமையை ஏற்படுத்தியது.

1992 இல் வட்டி வீதங்களை உயர்வாக வைத்திருப்பதற்கான மற்றுமொரு கட்டாயப்படுத்தும் காரணமும் இருந்தது. பணவீக்கத் தாக்கங்கள் இலகுவாக்கப் படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டபோதிலும் 1992 ஆம் ஆண்டு முழுவதிலும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்க வீதம் 9.5 சதவீத மட்டத்திற்கு மேலாக இருந்தவேளையில் ஆண்டுச் சராசரி வீதம் 11.4 சதவீதத்தில் காணப் பட்டமையினை நினைவுக்குக் கொண்டுவரல் வேண்டும். பணவீக்கம் உயர்வாகக் காணப்படும் காலப் பகுதிகளில் சேமிப்புக்களை மேற்கொள்ளும்போது மக்கள் நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டுவர். பணத்தின் பெறுமானம் தேய்வடைவதன் காரணமாக அத்தகைய சேமிப்புக்களின் மீது இழப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றமையே இதற்கான காரணமாகும். இத்தகைய காலப் பகுதியில் சேமிப்போர் நியாயமான நேர்க் கணிய உண்மை வருவாய் வீதங்களைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு வட்டி வீதங்கள் உயர் மட்டத்தில் பேணப்பட வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும். இத்தகைய நிலைமைகளில் வட்டி வீதங்கள் தாழ் மட்டங் களுக்கு வீழ்ச்சியடைவதற்கு அனுமதிக்கப்பட்டால் பொதுமக்களின் உள்நாட்டு நிதிச் சொத்துக்களுக்கான கேள்வியில் குறைப்பு ஒன்றின் ஊடாகச் சேமிப்பு ஆற்றல் பாதிக்கப்பட்டு நாடு கடுமையான முதலீட்டு மற்றும் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். நிதிச் சொத்துக்களுக்கான கேள்வி

யின் குறைப்பானது பொருளாதாரத்தின் உற்பத்தித்துறைகளுக்கான கடன் வழங் கலைக் குறைக்கும்படி நிதியியல் நிறுவனங்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் முதலீட் டிலும் வளர்ச்சியிலும் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பொருளாதாரக் கொள்கையின் முதன்மைக் குறிக்கோள் வளர்ச்சியையும் பொருளாதார அபி விருத்தியையும் மேம்படுத்துவதாகும். வளர்ச்சிக் குறிக்கோளை எய்துதலானது நாடு அதன் மூலவளங்களின் நியாயமான பாகமொன்றை முதலீட்டுக்காக ஒதுக்குவதனை வேண்டி நிற்கின்றது. இதன்படி, உள்நாட்டுச் சேமிப்புக்களின் அளவை அதிகரிக்கும் நோக்கிலான கொள்கைகளுக்கு அதிகூடிய முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டதுபோல் அத்தகைய கொள்கை களில் ஒன்றாகச் சேமிப்போருக்கு நியாயமான நேர்க்கணிய உண்மை வருவாய் வீதமொன்றை வழங்குவதற்கான செயற்றிறன் மிக்க வட்டி வீதக் கொள்கை அமைதல் வேண்டும். அதிகரித்த முதலீட்டுக் கேள்வியை எதிர்கொள்வதற்குப் போதுமான சேமிப்புக்களை உருவாக்கத் தவறின் நிதியியல் முறையானது கிடைக் கத்தக்கதாகவுள்ள கொடுகடனில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுவதற்குப் பல தரப்பட்ட பங்கு முறைகளை நாடவேண்டியிருக்கும் அல்லது வெளிநாட்டு மூல வளங்களில் பெருமளவில் தங்கியிருக்க வேண்டியிருக்கும். இத்தகைய நடவடிக்கை யானது பாதகமான விளைவுகளைக் கொண்டதாக இருக்கும்.

உள்நாட்டு நிதியியல் சொத்துக்களின் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சியானது சென்மதி நிலுவைகளிலும் முக்கியமான சிக்கல்களைக் கொண்டிருக்கும். இலங்கை யினைப் போன்ற சிறிய, சார்பு ரீதியில் திறந்த பொருளாதாரத்தினைக் கொண்ட நாட்டினது உள்நாட்டு நிதியியல் சொத்துக்களுக்கான கேள்வி வீழ்ச்சியடையும் போது வெளிநாட்டுச் சொத்துக்களுக்கான கேள்வியில் அதிகரிப்பொன்று ஏற்பட்டு மூலதன வெளிப்பாய்ச்சலுக்கு இட்டுச் செல்லும். உள்நாட்டுச் சேமிப்பின் குறைப் பிலிருந்து உருவாகும் நடைமுறைக் கணக்குப் பிரச்சினைகளைச் சிக்கலாக்கும் பாரிய மூலதன வெளிப்பாய்ச்சல்கள் செலாவணி வீதங்களில் தொடர்ச்சியான தாக்கங்களுடன் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளை அதிகரிக்கச் செய்யும் அல்லது பன்னாட்டு ஒதுக்குகளிலிருந்தான எடுப்பனவுகளுக்கு நாட்டை நிர்ப்பந்திக்கும். மூலதன நகர்வின்மீது கட்டுப்பாடுகள் காணப்பட்டபோதிலும் பலதரப்பட்ட வழிப்படுத்தல்களின் ஊடாக மூலதன வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்து இடம் பெறும். மாறாக, நாட்டிற்குத் தற்போதைக்குத் தேவையானது என்னவெனில் அபிவிருத்திக் குறிக்கோள்களை எய்துவதற்காக உள்நாட்டுச் சேமிப்புக்களின் குறைநிரப்புதலுக்கான தேறிய மூலதன உட்பாய்ச்சலேயாகும்.

மேலும் சேமிப்புக்களின் அளவு தரப்பட்டவையாக இருக்குமிடத்து வட்டி வீதங்களின் மட்டம் நிலையான முதலீட்டின் அளவிலும் தாக்கங்களைக் கொண் டிருக்கும். ஒப்பிடுகையில் வட்டி வீதங்கள், நிலவும் பணவீக்க வீதத்திற்குத் தாழ்வாகக் காணப்படுமிடத்து முதலீட்டு நோக்கங்களுக்காக மட்டுமன்றி, சரக்குத் தொகுதிப் பட்டியல், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், உண்மைச் சொத்து மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் போன்றவற்றின் ஊடாக, பண வீக்கத்தின் இழப்புக்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் கடன் பெறுவது நிறுவனங் களுக்கு இலாபகரமானதாகத் தோன்றும். நிதியங்களுக்கான இம் மேலதிகக் கேள்விகளானவை நிலையான முதலீட்டுக்கான நிதியிடலைக் குறைக்கக்கூடும்.

பணவீக்க வீதங்களுக்குத் தாழ்வான வீதங்களில் வட்டி வீதங்களைப் பேணும் காள்கையானது முதலீட்டின் உற்பத்தித்திறனையும் குறைவடையச் செய்யும்.

முதலாவதாக, கிடைக்கக்கூடிய நிதிச் சேமிப்புக்களின் மட்டுப்படுத்தப்பட்ட தொகைகளின் மத்தியில் அரிதான நிதி மூலங்களின் பங்கீட்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கொள்கைகள் போன்ற நிருவாக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதோடு இது மூலவளப் பயன்பாட்டில் திறமையின்மையுடன் இணைந்திருக்கும். இத்தகைய கொடுகடன் பங்கீடுகள்தொழில் முயற்சிகளினால் செயற்றிட்டங்களின்மீது கவனமான மதிப்பீட்டினை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தினையும் இச்செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் மூலவள பயன்பாட்டின் சிக்கனத்தையும் குறைவடையச் செய்யும். இரண்டாவதாக, கொடுகடன் பங்கீடு ஒன்று காணப்படாதவிடத்தும் கூட மூலதன ஒதுக்கீட்டுத் திறமையானது. அத்தகைய முதலீடுகளின் வருவாய் வீதங்களைக் கருத்திற்கொள்ளாது சிறிய அளவிலான அல்லது புதிய கடன் பெறுநர்களைவிட நன்கு நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளின் காரணமாகத் திரிபுபடலாம். மூன்றாவதாக, உயர் வேலை வாய்ப்பின்மைக்கும் சமூகப் பிரச்சனைகளுக்கும் இட்டுச் செல்லும் மூலதனச் செறிவு நுட்பங்களைக் கொண்ட முதலீடுகளுக்குச் சாதகமான ஒருபக்கச் சார்பான முதலீட்டினையும் அது விளைவிக்கக் கூடும்.

உண்மை வட்டி வீதங்கள் எதிர்க்கணியமாக அல்லது குறைவாக இருக்கும் போது வருவாயினதும் செல்வத்தினதும் பகிர்ந்தளிப்பு நாட்டின் உயர் வருமானக் குழுவினருக்குச் சாதகமானதாகவே அமையும் என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். குறைந்த வருவாயைக் கொண்ட குடியிருப்பாளர்களும் உற்பத்தியாளர்களும் நிதிச் சொத்துக்களிலன்றி ஏனையவற்றில் தமது சேமிப்புக்களை முதலீடு செய்வதற்கு மிகக் குறைந்த சந்தர்ப்பங்களையே கொண்டிருப்பதோடு இதே நேரத்தில் நிதி நிறுவனங்களிலிருந்தான கடன் வசதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களையே கொண்டுள்ளனர். மறுபுறத்தில் உயர் வருவாயைக் கொண்ட குடியிருப்பாளர்களும், பாரிய உற்பத்தி அலகுகளின் உடைமையாளர்களும் நிதியங்களைக் கடனாகப் பெறுவதற்கு விரிவான வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதோடு பணவீக்கப் பாதுகாப்பாகச் செயல் புரியும் பலதரப்பட்ட முதலீடுகளில் தமது சேமிப்புக்களை முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களையும் கொண்டுள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வானது நாடு எதிர்நோக்கும் பேரண்டப் பொருளாதார அறைகூவலின் சூழலில் குறிப்பாகத் தொடர்ச்சியான உயர் வீத நாணய விரிவாக்கத்தினதும் அதனோடிணைந்த பணவீக்கத் தாக்கங்களினதும் சூழலில் 1992 இல் இலங்கையில் தரக்குறைவான குறைந்த நாணயக் கொள்கையொன்றினைப் பின்பற்றுவதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே காணப்பட்டது. உயர் வட்டி வீதக் கொள்கை தவிர்ந்த வேறு ஏதேனும் கொள்கை வழிமுறையானது இப்பிரச்சனைகளைச் சிக்கலானதாக்கி நிதியியல் அடக்குமுறையினைக் கொண்டுவந்து சென்மதி நிலுவையிலும் செலாவணி வீதத்திலும் கடுமையான தாக்கத்தினையும் ஏற்படுத்தியிருக்கும். இது இலங்கை போன்ற அபிவிருத்தியடையும் நாடொன்றுக்கு உயர் வட்டி வீதக் கொள்கையானது மிக அத்தியாவசியமானதும் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குமான தீர்வுமாகும் என்று வாதிடுவதற்கு அல்ல. இங்கு வலியுறுத்தப்படுவது என்னவெனில் நாடு எதிர்நோக்கும் குறிப்பிட்ட சில பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் கீழ் உயர் வட்டி வீதக் கொள்கையொன்றே பொருளாதாரத்தில் ஆகக் குறைவான ஊறு விளைவிக்கக் கூடியது என்பதாகும்.